பக்கங்கள்: பத்து
விலை ரூபா 5-00
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

உங்கள் கண்களைப் பரிசோதித்து கண்ணாடி பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்.
எரிக் கணேஷ்
564, 566, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.
(சி-2751)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஐப்பசி 23 வெள்ளிக்கிழமை (9-11-2001) தொலைபேசி: 3378 ஒலி 333

## அரசு - புலிகள் சமாதானப் பேச்சை தொடர நோர்வேயின் உதவியை மீண்டும் நாடுவேன்

### அமைச்சர் கதிர்காமர் அறிவிப்பு

[கொழும்பு]

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே மீண்டும் சமரச முயற்சிகளை ஆரம்பிக்கும் வகையில் நோர்வேயின் புதிய வெளியுறவு அமைச்சர் ஜனாபீற்றர்சனை அடுத்த வாரம் சந்திக்கப் போவதாக வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இனவிவகாரத்தை தீர்வுக்கு கொண்டுவரும் முயற்சியில் நோர்வே முக்கிய பங்காற்றியது என்பதை வலியுறுத்தி அமைச்சர் கதிர்காமர் மேலும் தெரிவிக்கையில்.

அரசாலும் விடுதலைப் புலிகளாலும் சமரச முயற்சியின் மத்தியஸ்தராக நோர்வே ஏற்கனவே அங்கீகரிக்கப் பட்டுள்ளது.

இந் நிலையில் நோர்வேயில் அரசியல் மாற்றம் ஏற்பட்டு புதிய அரசாங்கம் ஆட்சியை கைப்பற்றியுள்ள போதிலும் அங்கு இலங்கை தொடர்பான சமரச முயற்சிக் கொள்கையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை மேலும் எமது நாட்டு விவகாரத்தில் அவர்களுக்கு கூடுதல் அக்கறை ஏற்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நியுயோர்க்கில் இடம் பெறவிருப்பதால் அக் கூட்டத்தில் கலந்து கொள்ள இலங்கையின் பிரதிநிதியாக அடுத்த

(10ம் பக்கம் பார்க்க)

## க. பொ. த. உயர்தர முடிவு அடுத்தவாரம்

(கொழும்பு)

2001ம் ஆண்டு ஆகஸ்ட்மாதம் நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் அடுத்தவார இறுதியில் வெளிவரவிருப்பதாக பரீட்சைத்திணைக்களம் அறிவித்துள்ளது.

பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்படும் அதேதினம் பரீட்சைத் திணைக்களத்தின் இணையத் தளத்தினூடாகவும் பெறுபேறுகளை மாணவர்கள் அறிந்துகொள்ளமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# சமாதானத்திற்கான யுத்தம் தொடரும்

# பிரபாவுடன் அரசு பேசினாலும் தமிழீழத்தை வழங்கமாட்டோம்!

## நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி உரை



**ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழீழ விடுதலைப் புலிகளும் ஆட்சிஅதிகாரததைப்கைப்பற்றுவதற்காகவே கூட்டுச் சேர்ந்துள்ளன.**

**விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை பேச்சுவார்த்தைக்கு அழைத்த போது அவர் வரவில்லை இப்பொழுது பேச்சு வார்த்தைக்கு வரவேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்பட்டுள்ளது.**

**சமாதானத்திற்காக அரசு மேற் கொண்டுள்ள யுத்தம தொடரும் என்றும் ஜனாதிபதி சந்திரிகா சூளுரைத்துள்ளார்.**

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நேற்றுஇரவு ரூபவாகினிமூலம் நாட்டுமக்களுக்கு உரையாற்றும் போது மேற்கண்டவாறு சூளுரைத்துள்ளார்.

இந்தஉரையின் போது ஜனாதிபதிசந்திரிகா குமாரதுங்கா மேலுமகூறியதாவது.

பயங்கரவாதத்தின்விளைவுகளை நாம் கண்டுள்ளநிலையில் சிவில்யுத்தத்தை சமாதானத்துடன் முடிவுக்கு கொண்டுவரவுள்ளோம் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு ஆதரவு வழங்கமறுத்த நாடுகள் தற்போதுஎமக்குஆதரவு தருகின்றன.

விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தமிழ் ஈழத்தையே விரும்புகிறார். தமிழ்மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு அவருக்குவிருப்பமில்லை.

ஜனநாயகத்திற்கு நான் விரோதமானவர் என்றுஅவர்கள் தெரிவித்துவந்தனர் இரண்டாயிரமாம் ஆண்டுப் பொதுத் தேர்தலின்மூலம் மூன்றுபுலிகள் பாராளுமன்றம் வந்திருந்தார்கள்.

மக்களால் ஜனநாயகமுறைப்படி தெரிவுசெய்யப்பட்ட பொதுஜனஐக்கிய முன்னணி அரசை தமிழ்க்கட்சிகளின் ஒன்பது பிரதிநிதிகளின்உதவியுடன் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு முயன்றுவருகிறது.

ஐக்கிய தேசியக்கட்சியின் இத்தகைய செயற்பாடு எனக்கு மட்டுமல்லசமாதானத்தைவிரும்பும் அனைவருக்கும் பாதகமாகவுள்ளது ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா

(10 ம் பக்கம் பார்க்க

## வடக்குகிழக்கில் நீதியான தேர்தலுக்குவாய்ப்பில்லை

(கொழும்பு)

வடக்குகிழக்குப் பகுதிகளில் நீதியான தேர்தல்நடைபெறுவதற்கு வாய்ப்பில்லையென்று தேர்தல்வன்முறைகள் கண்காணிப்பு மையத்தின் இயக்குனர் பாக்கியசோதி சரவணமுத்து அவநம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

தேசியரீதியில் தேர்தல் இடம்பெறாமல் மாவட்டரீதியாக தேர்தல் நடைபெற்றால் சட்டரீதியாக அத்தேர்தல் செல்லுபடியற்றது இதனால் தேர்தல்சட்டத்தை சமாளிக்கவே வடக்கு கிழக்கில் தேர்தல் நடத்தப்படுகின்றதென சரவணமுத்து குற்றம் சாட்டியுள்ளார்.

வடக்குகிழக்கின் தேர்தல் குறித்து அவர் மேலும்குறிப்பிடுகையில் ஒருபுறத்தில் இடம்பெயர்ந்தவர்கள இலட்சக் கணக்கில் வாழுகின்றனர் மறுபுறத்தில் அரச கட்டுப்பாடில்லாத பிரதேசத்தில் பல இலட்சமமக்கள் வாழுகின்றனர் இந்நிலையில் வடக்கு வடக்குகிழக்குத் தேர்தல் வெறு... கூத்தென்றுகூறினார் (இ)

## புளொட் உறுப்பினர்களே எமது வாகனத்தை மறித்தனர்

### மாவை சேனாதி விளக்கம்

(யாழ்ப்பாணம்)

நேற்றைய வலம்புரிப் பத்திரிகையின் முன்பக்கத்தில் 'புளொட் ஆதரவாளர்கள் அச்சுறுத்தப்பட்டனர்' என்ற செய்தி தொடர்பாக, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் கூட்டணியின் வேட்பாளருமான மாவை சேனாதிராஜா, நிலைமையை விளக்கி கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார். அதன் விபரம் வருமாறு,

நான் நேற்று முன்தினம் மாலை 6.00 மணிக்கு தேர்தல் பிரசாரங்களை கோப்பாய் பிரதேசத்தில் முடித்துவிட்டு அச்சுவேலியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி இராசவீதி வழியாக வந்துகொண்டிருந்தேன், எங்கள் மோட்டார் வண்டியில் உதய சூரியன் கொடி பட்டவர்த்தனமாக பறந்துகொண்டிருந்தது ஒரு 'பிக் அப் வாகனம் [நீர்வேலிப் பகுதியில்] வேகமாக வந்து நாம் வந்துகொண்டிருந்த வாகனத்தை முந்திச் சென்று சிறிது தூரம் சென்றபின் வேகத்தைக் குறைத்து எமது வாகனத்தை முந்திச்செல்ல விட்டது. பின் வேகமாகவந்த அந்தப் 'பிக் அப்' வாகனம் எமது வாகனத்தை முந்திச் சென்று வலது பக்கமாக நிறுத்தப்பட்டது. நான்கு ஐந்துபேர் அதிலிருந்து இறங்கிநின்று எமது வாகனத்தை நிறுத்தினர்.

எனது வாகனததில இருந்த எனது இரு மெய்ப்பாது காவலரும் எனதுஉயிருக்கு ஆபத்து நேரிடப்போவதாக எண்ணி 'பிக்அப்' வாகனம் நிறுத்தப்பட்ட பக்கம் ஓடிச் சென்று நின்றவர்களை விசாரித்தனா. அப்போது 'பிக் அப்' வாகனத்திலிருந்து இறங்கி நின்றவர்கள 'எங்களிடமும்ஆயுதம் இருக்கிறது சுட்டுத் தள்ளித் தெருவில்போட்டுவிடுவோம்' என்று எமது மெய்ப்பாதுகாவலரிடம்தெரிவித்துள்ளனர்,

இதில் சாவகச்சேரி நகர சபைத்தலைவர் அன்ரன் பொன்னையாவும் அதில் நின்றவர்களில் ஒருவர் என்ப

(10-ம் பக்கம் பார்க்க

## நிபந்தனையின்றி புலிகளுடன் பொ.ஐ.முன்னணி பேச்சு நடத்தும்

### அமைச்சர் டி.எம்.ஜெயரத்தினா தகவல்

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வுக்குத் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் நிபந்தனைஅற்றமுறையில் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தும் என்றும் பொதுஜன ஐக்கியமுன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வலியுறுத்தியுள்ளதாக அமைச்சரும், பொதுஜன ஐக்கியமுன்னணிச் செயலாளருமான டி எம் ஜயரத்தினா தெரிவித்துள்ளார்.

பொதுஜன ஐக்கியமுன்னணியினால் 13ம்திகதி செவ்வாய்க்கிழமைவெளியிடப்படவுள்ள இத்தேர்தல் விஞ்ஞாபனத்தில் மேலும்தெரிவிக்கப் பட்டிருப்பதாவது,

வடக்கிலும்கிழக்கிலும் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு இத்தேர்தல் விஞ்ஞாபனத்தில் முக்கிய இடம்கொடுக்கப்பட்டுளளது,

வேலைவாய்ப்பு விவசாய அபிவிருத்தி, அரச ஊழியர்களுக்கு நிவாரணம் என்பவற்றில் விசேடகவனம் செ

(10-ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

திருவாசகம். திருமந்திரம், திருக்குறள், திருப்புகழ், திரு அருட்பா, தாயுமானவர் பாடல், நற்சிந்தனை இன்னும் ஆத்மஞான நூல்கள் பல இருக்கின்றன. தொடர்பு:- 135 சிவன் கோயில் முன்பாக நல்லூர், யாழ்ப்பாணம். நேரம் மாலை 2.00 - 7.00 வரை. (3938)

## இயக்குநர் சபை உறுப்பினர்கள் தெரிவு

(மந்திகை)

கட்டைவேலி நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர் சபை தேர்தல் அண்மையில் நடை பெற்றது.

இத் தேர்தலில் இயக்குநர் சபை உறுப்பினர்களாக பின் வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

சங்கத்தின் இயக்குநர் சபைத் தலைவராக ச.சிதம்பரப்பிள்ளை, உப தலைவர் ஆ. சண்முகம், இயக்குநர்களாக, வீ.நடராசாமு. ஸ்ரீஸ்கந்தராசா, இ இரவீந்திரன், மா. பிரபாகரன், சி. பாலமுரளி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

(செ-23)

## விரிவுரையாளர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நிலவும்விரிவுரையாளர் பற்றாக்குறையினைப் போக்கும் வகையில் புதிதாக ஐவர்நியமிக்கப்பட்டுள்ளனர்.

உயிரியல், தமிழ், விவசாயம்,வர்த்தகம், கணிதம் ஆகிய பாட நெறிகளைப் போதிப்பதற்கே புதிய விரிவுரையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். (உ-9,19)

## கிளை அலுவலகம் திறப்பு

(துன்னாலை)

வடமராட்சியில்நேற்றுமுன் தினம்புதன்கிழமைதமிழர்விடு தலைக்கூட்டணியின் கிளை அலுவலகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நெல்லியடி பருத்தித்துறை வீதியிலேயே இக் கிளை அலுவலகம் அமைந்துள்ளது.

(செ-41)

## கொடுப்பனவு மீளாய்வு

(துன்னாலை)

பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட தபாலகங்களில் வழங்கப்படும் பொதுசன மாதாந்த உதவிக் கொடுப்பனவு மீளாய்வு செய்யப்பட்டு வருவதாக பருத்தித்துறை பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (எ-04)

## நீரில்மூழ்கி நெற்பயிர் அழிவு

(நீர்வேலி)

தொடர்ந்து பெய்துவரும் மழைகாரணமாக நீர்வேலி கோப்பாய்ப்பகுதி நெற் பயிர்கள் நீரில் மூழ்கி அழிந்துள்ளன.

கடந்தகால போர்நடவடிக்கையின் நீண்ட இடைவெளியின்பின்னர் இம்முறை அதிகம்பேர் நெற்செய்கையில் ஆர்வத்தோடு ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

(உ-239)

## மிதிவெடிவிழிப்பு

(புத்தூர்)

புத்தூர் சந்திப் பகுதியில் யுனிசெவ் நிறுவன அனுசரணையுடன் மிதிவெடி விழிப்புணர்வுப் பலகைகள் நிறுவப்பட்டுள்ளன. (உ-235)

## கவிதைநூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

த. ஜெயசீலனின் ''கனவுகளின் எல்லை'' கவிதை நூல் வெளியீடு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைகாலை 9.00 மணிக்கு கலாநிதி இ. முருகையன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் வரவேற்புரையை இரா. செல்வவடிவேலும், ஆசியுரையை க. சிவராமலிங்கமும் வாழ்த்துரையை க. மூதறிஞர் சொக்கனும் தொடக்கவுரையை ஆறு. திருமுருகனும்நிகழ்த்தவுள்ளனர்.

வெளியீட்டுரையை பேராசிரியர் அ. சண்முகதாஸ் ஆற்றுவார்.

நூல்விமர்சன உரைகளை அ. யேசுராசா, கல்வயல் வே. குமாரசாமி, சோ.பத்மநாதன் ஆயோர் நிகழ்த்தவுள்ளனர். (உ)

## இராணுவத்தினர் காயம்

(கொழும்பு)

வெலிஓயாவுக்கு வடகிழக்கே கனகபுரப் பகுதியில் வீதி திருத்தத்திற்குப் பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்த இராணுவத்தினர், அப்பகுதியில் புதைக்கப்பட்டிருந்த கிரனைட் வெடித்ததில் காயமடைந்ததாக ஊடகத் தகவல் மையம்விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)


# மக்கள் வங்கி

PEOPLE'S BANK

## கேள்விப்பத்திர அறிவித்தல்

## பாவித்த மோட்டார் வாகனங்கள் விற்பனை

பின்வரும் வாகனங்களை விற்பதற்கான விலைக் கோரிக்கைகள் கோரப்படுகின்றது.

50-6117 இலக்கமுடைய மஸ்டா வான்

31-8966 இலக்கமுடைய மிற்சுபிசி ஜீப்

வடவலய உதவிப் பொது முகாமையாளர், மக்கள்வங்கி, 79 கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாண அலுவலகத்தில் பெறப்பட்ட படிவங்களில் விலைக் கோரிக்கை மனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலை மனுக் கோரிக்கை தொடர்பான அறிவுறுத்தல்களும் நிபந்தனைகளும் கேள்வி மனுக்களுடன் வழங்கப்படும்.

திருப்பிப் பெறாத கட்டணமாக ரூபா 250/- செலுத்தி 2001.11.21 ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை கேள்வி மனுவுக்கான பத்திரங்களை மக்கள் வங்கி, வடவலய உதவிப் பொது முகாமையாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு வாகனத்திற்கும் தனித் தனியே திருப்பிப் பெறக் கூடிய கட்டணம் ரூபா 5000/- ம் விண்ணப்பம் சமர்ப்பிக்கும் போது செலுத்தப்படல் வேண்டும்.

உதவிப் பொது முகாமையாளர்<br>
மக்கள் வங்கி,<br>
வட வலய அலுவலகம்<br>
79, கன்னாதிட்டி வீதி,<br>
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021-2601 - 021-2602<br>
021-2956<br>
தொலை நகல்: 021-2602 -021-2956

(C/ 2836)



# அருணலு

## பெறுமதிமிக்க பரிசில்களை புலமைப்பரிசு பெறும் செல்வங்களுக்கு வழங்குகிறது.

உங்களுடைய பிள்ளை புலமைப் பரிட்சையில் சித்தியெய்தி அதிகப்படியான புள்ளிகளை 1ம் 2ம் அல்லது 3ம் இடத்தில் அவருடைய பாடசாலையில் பெற்றிருப்பதுடன் பரீட்சை எழுதும் போது அவரது அருணலு கணக்கில் குறைந்தது ரூபா 5,000/- மீதியாக இருந்திருந்தால், உங்களுக்கு எதிர்பாராத ஆச்சரியங்கள் காத்திருக்கின்றன.

நீங்கள் அருணலு கணக்கு வைத்திருக்கும் கொமர்ஷல் வங்கி கிளைக்கு பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்துடன் சென்று பெறுமதிமிக்க பணப்பரிசுகளை தட்டிக் கொள்ளுங்கள். நீங்கள் உங்களுடைய பிள்ளைக்கு அருணலு கணக்கு திறந்திருப்பதையிட்டு மகிழ்ச்சியடையவில்லையா?

**கொமர்ஷல் வங்கியின் அருணலு ஒளிமயமான எதிர்காலத்தை புலமைப்பரிசு பெறும் செல்வங்களுக்கு வழங்குகிறது.**

COMMERCIAL BANK

# கொமர்ஷல் வங்கி

## உங்கள் ஆதாயமே எங்கள் நோக்கம்

(C-2835)

## ஐ.தே.க.வை புலிகளுடன் தொடர்புபடுத்தி பொய்யான அறிக்கை தயாரிக்க

# ஜனாதிபதி சந்திரிகா பணித்தாராம்

### எஸ்.பி.திஸாநாயக்கா தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசில் தாம் இருந்த வேளை, விடுதலைப் புலிகளுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் இரகசியத் தொடர்புஇருப்பதாகத் தெரிவித்து பொய்யான அறிக்கை ஒன்றைத் தயாரிக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்ததாக முன்னாள அமைச்சர் எஸ் பி திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் விடுதலைப் புலிகளுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையே இரகசிய ஒப்பந்தம் ஒன்று இருப்பதாக ஜனாதிபதி விஷமப் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றார்.

ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றவே ஜனாதிபதி இவ்வாறு பகீரதப் பிரயத்தனம் செய்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். [உ-5]

# மீன்பிடித் தடையை நீக்கக்கோரி செயலகம் முன்மறியற் போர்

### விரைவில் நடத்தகடற்றொழிலாளர்தீர்மானம்

[மந்திகை]

வடமராட்சிக் கடலில் மீன் பிடிக்க மீண்டும் மீண்டும் விதிக்கப்படும் தடைகளை நீக்கி, சுயாதீனமாக மீன் பிடிக்க அனுமதி வழங்கப் படாத பட்சத்தில் அதனைக் கண்டித்து யாழ் மாவட்டச் செயலகம் முன்பாக மறியற் போராட்டம் நடத்தத்திட்டமிடப்பட டுள்ளது.

கடந்த ஞாயற்ன்று வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த 9 கடற்றொழிலாளர்கள் சங்கங்கள் பொலிகண்டி கடற்றொழிலாளர்சங்கத்தில்கூடிய போது மேற்படி திட்டத்திற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தொண்டைமானாறு மயிலந்தனையில்இருந்து சக்கோட்டை வரை மீன்பிடிப்பதற்கு விதிக்கப்பட்ட தடையை நீக்குமாறு 524வது பிரிகேடியர் மற்றும் சம்பந்தப் பட்ட பிரதேச செயலர் அரச அதிபர் ஆகியோரைக் கடித மூலம் கோருவது எனவும்,

அவர்களிடம் இருந்துசாதகமான பதில் கிடைக்கத் தவறும் பட்சத்தில்செயலகம்முன் மறியற் போரில் குதிப்பதுஎனவும் தீர்மானிககப்பட்டது.

இதேவேளை, மேற்படி தடையை நீக்கக்கோரிநடந்த திங்களன்று பொலிகண்டி இராணுவ முகாம் முன்பாக 300 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் ஒன்று கூடிஅடையாள உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியமையும் குறிப்பிடத்தக்கது. (உ-23)

## மகா கும்பாபிஷேகம்

(அளவெட்டி)

சண்டிலிப்பாய் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ இராசேஸ்வரி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 45 மணிக்கு நடைபெறவுள்ளது. (செ-237)

## இராசி பலன்

9/11/2001
ஐப்பசி 23, வெள்ளி
நவமி பி.ப. 1.11 வரை
ஆயிலியம் மு:ப: 6.07 வரை
மகம் பி இ. 4.30 வரை
இராகுகாலம் 10.05 - 12.05
சுபநேரம் 6.05 - 7.35

**மேடம்**
தாழ்ந்தசுபாவம், தொழில் சிறப்பு. குடும்பக் கவலை, முயற்சி தாமதம்.

**இடபம்**
காரியம் கைகூடும், மனத் தளர்வு, ரோகபயம், வாக்கு மேன்மை,

**மிதுனம்**
சகோதரர் உதவி, கூட்டு முயற்சி, முயற்சி நிறைவேறும், நண்பர்கள் சந்திப்பு.

**கடகம்**
வாக்குக் கலகம், முயற்சி தாமதம், சென்ற இடத்தில் செல்வாக்கு குறையும், தன விரயம்.

**சிங்கம்**
உடல்நலம், நல்லமுயற்சி, நினைத்த காரியம் கைகூடும், செல்வாக்கு.

**கன்னி**
கோபப்படுதல், காரிய அலைச்சல், பொருள்விரயம், உறவினர் சந்திப்பு.

**துலாம்**
குடும்ப சுகம், தெய்வ தரிசனம், முயற்சி நிறைவேறும், பொருள சேர்க்கை,

**விருச்சிகம்**
தொழில் நன்மை, உற்சாகம், சந்தோசமான நிகழ்வு, காரியம் கைகூடும்.

**தனுசு**
உடல் களைப்பு, மனச்சஞ்சலம், போசன சுகம், காரிய தாமதம்.

**மகரம்**
நினைத்த காரியம் தடங்கல், உறவினர் மனஸ்தாபம், பிரயாணபயம், சிறு வியாதி.

**கும்பம்**
பெரியோர் ஆதரவு, பிரயாண சுகம், குடும்ப நன்மை, தொழில் சிறப்பு.

**மீனம்**
சந்தோசமான நிகழ்வு தொழில் முயற்சி, தனவரவு, காரிய அனுகூலம்.
(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## பிரம்மஸ்ரீ சிவராஜசர்மாவிற்கு துணைவேந்தரின் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

சிறுவர்கள், இளைஞர்கள், முதியோர்கள் அனைவருக்கும் உகந்த முறையில் சிறந்த ஆன்மீகக்கருத்துக்களை தனது தெய்வீகப் பேருரையில் அரிய விருந்தாக பிரம்மஸ்ரீ சிவராஜ சர்மா வழங்கிவருகிறார்.

இவ்வாறு யாழ். பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை பிரம்மஸ்ரீ கு. சிவராஜ சர்மாவின் பாராட்டு வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அத்தியடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயததில் தொடர்ந்து ஒன்பது தினங்கள் சிவராஜ சர்மா ஆன்மீகப்பேருரை நிகழ்த்தியமைக்காக மகிடாசுரசங்கார தினத்தன்று மேற்படி ஆலயத்தில் அவர்பாராட்டிக்கௌரவிக்கப்பட்டார்.

தனது ஆன்மீக உரையின் போது சிறுவர்களிடம் கேள்வி கேட்டு பதில் கூறுவோர்க்கு சிவராஜ சர்மா தேவார திருவாசக நூல்களைப் பரிசாக வழங்கி வருவது அவரதுஉரையில் சிறந்த ஓர் அம்சம் என்று துணைவேந்தர் தொடர்ந்து பேசுகையில் கூறினார்.

சிவஸ்ரீ யோகீஸ்வரக்குருக்கள் ஆசியுரை வழங்கினார். (எ)

## ஜே.வி.பியினரின் இனவாத அரசியல் போக்கு

### பெ. சந்திரசேகரன் கண்டனம்

(கொழும்பு)

ஈழக் கோரிக்கையைக்கை விட்டால் மாத்திரமே புலிகளுடன்பேசலாம் என்றுஜே வி.பி யினர்இப்போது தெரிவித்திருப்பது அவர்களது சுயநலம் மிக்க,கீழ்த்தரமான அரசியல் போக்கையே காட்டுகின்றது என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினையில் அக்கறையுள்ள பல நாடுகள் இலங்கை இரண்டாகப் பிரியாத வகையிலானஓர் அரசியல் தீர்வையே கூறிவந்தன சமரசம் பேச வந்தநோர்வேயின் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் கூட இதன் அடிப்படையிலேயேபேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தார்.அதைக் குழப்பியடிப்பதில் இலங்கை அரசிற்குச் சமதையாகஜே வி.பி செயற்பட்டது சொல்ஹெய்ம் ஜே.வி.பி யோடு பேச்சுவார்த்தை நடத்த முயற்சி எடுத்த போதெல்லாம்அவர்கள் அதை உதாசீனம் செய்தனர் இது அவர்களது இனவாதப் போக்கைக் காட்டியது இன்று அவர்கள் தமிழ் மக்களின் வாக்குகளை சிறிதளவாவது தேர்தலில் பெற்றுவிடலாம் என்றகீழ்த்தரமான அரசியல் முயற்சியாக ஈழக் கோரிக்கையைக் கைவிட்டால் மாத்திரமே விடுதலைப்புலிகளுடன் பேசலாம் என்று கூறுவது அவர்களது கோமாளித்தனத்தைக்காட்டுகிறதுஎன்று மேலும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)


## திருமண வாழ்த்து

07. 06. 2001 அன்று
இல்லற பந்தத்தில் இணைந்து கொண்ட
முருகேசு ஆனந்தநாயகி
அவர்களின் தவப்புதல்வன்
வடமராட்சி புகழ் கவிதை மன்னன்

மனோகரன் (மனோ) — மனோமகள் (பேபி)

தம்பதியினரை பல்லாண்டு காலம்
சீரும் சிறப்புடனும் இனிதே வாழ
கரவை தஞ்சை ஐங்கரனை வேண்டி
வாழ்த்துநிற்கும்,

கரவை கவிஞனின்
ரசிகர்கள்

(3937)



செனித் மார்க்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ் ஸ்தாபனத்தாரும் யாழ். சேவையும் இணைந்து வழங்கும்

## தீபாவளி வாழ்த்துச் செய்திகள்

யாழ். சேவை ஊடாக உங்கள்உறவுகளுக்கு தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறீர்களா?

அப்படியாயின் வாழ்த்தப்படுவோர் பெயர்களை எழுதி கீழே உள்ள கூப்பனைப் பூரணப் படுத்தி அனுப்பி வைக்கவும்.

=======→===================-‖

### தீபாவளி வாழ்த்துச் செய்தி

வாழ்த்துவோர் பெயர்: ..............................

சொந்த முகவரி: ..............................
..............................

தற்காலிக முகவரி: ....................

அடையாள அ. இல: ..............................

=========================

வாழ்த்துக்கள் வந்து சேரவேண்டிய முகவரி
உருவாக்கல் இயக்குநர்,
**செனித் மார்க்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்**
சுண்டுக்குளி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி.

வாழ்த்துக்கள் வந்து சேர வேண்டிய இறுதித் திகதி: 10-11-2001

இயக்குநர்
செனித் மார்க்கட்டிங்
அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ்,
[சி2740]



## பிரிவுத்துயர் பகிர்வு

### திருமதி ஜெயக்குமார் ஞானதேவி

அளவெட்டி கிழக்கு கும்பலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயக்குமார்ஞானதேவி 5-11-2001 காலமானார் அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று நடைபெறும்

தகவல்
க. குணசேகரம்
(மைத்துனர்)

கும்லை,
அளவெட்டி கிழக்கு.

### பு. சிறிசந்திரராஜா

அச்சுவேலி வளலாயைப் பிறப்பிடமாகவும் 38, கோவிலவீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பு. சிறிசந்திரராஜா (யாழ். உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய ஆசிரியர்) நேற்று காலமானார். அன்னாரின் ஈமக்கிரியை இன்று நடைபெறும்,

தகவல்
குடும்பத்தினர்

# மக்கள் குறை நிவிர்த்தி சேவை

## மத்திய மற்றும் மாகாண அமைச்சுக்களின் நடமாடும் சேவை

★ **வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சின்**

ஏற்பாட்டில் கடந்த வைகாசி மாதம் நடைபெற்ற மக்கள் குறைநிவிர்த்தி சேவையின் போது அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் எதிர்வரும் **10ஆம் 11ஆம் திகதிகளில் (10.11-2001 சனிக்கிழமை 11-11-2001 ஞாயிற்றுக்கிழமை)** யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் காலை 8.30 மணிமுதல் மாலை 4.30 மணிவரை மக்கள் குறைநிவிர்த்திசேவை நடைபெறும்.

★ இச்சேவையின் ஊடாக தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய விரும்பும் அனைவரும் இச்சேவையில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

★ மத்திய அமைச்சுக்களின் உயரதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள், வடக்கு - கிழக்கு மாகாணசபையின் செயலாளர்கள் திணைக்களத்தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் இச்சேவையில் பங்கேற்பதால், இவர்களுடனான உத்தியோக பூர்வ கடமைகளை துரிதப்படுத்தவும், மக்களுக்கு விரைவாக கருமமாற்றவும், வீணான தாமதங்கள் மக்களுக்கு ஏற்படுவதை தவிர்க்கும் நோக்குடன், இச்சேவையை மக்களுக்கு வழங்குவதில் எமது அமைச்சு மகிழ்ச்சி அடைகிறது.

### மாணவர் காப்புறுதித் திட்டம்

யாழ் மாவட்டத்தில் உள்ள 5 வலயங்களை உட்படுத்திய 445 பாடசாலைகளைச் சேர்ந்த 158,458 மாணவர்களுக்கான காப்புறுதித் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படுகின்றது;

இத்திட்டத்தை அறிமுகப்படுத்தவென இலங்கை காப்புறுதிக்கூட்டுத் தாபனத்துடன் வடக்கின்மீள் குடியேற்ற, புனரமைப்பு அதிகாரசபை ஒருமாணவனுக்கு ரூபா 25 000 /- பெறுமதியான விபத்துக்காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றை கைச்சாத்திட்டுள்ளது;

இத்திட்டத்திற்கென எந்தவொரு மாணவனும், எதுவித பணக் கொடுப்பனவும் செலுத்தத்தேவையில்லை;

இத்திட்டத்தின் விசேடஅம்சங்களும், இதனால் மாணவர்களுக்குக் கிடைக்கும் பயன்பாடுகள் தொடர்பான விரிவான அறிவித்தல் விரைவில் வெளிவரும்.

இந் நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளும்படி வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக கோட்டக்கல்வி அதிகாரிகளுக்கு அறிவிக்கப் பட்டுள்ளது;

பாடசாலை அதிபர்கள் மற்றும் அதிகாரம் அளிக்கப்பட்ட ஆசிரியர்கள், மாணவ வகுப்புத்தலைவர்கள் இத் திட்டத்தை உடன் அமுல்படுத்தும் முகமாக இதற்கென அனுப்பிவைக்கப்பட்டுள்ள படிவங்களை கோட்டமட்டத்தில் பெற்று அவற்றைப் பூர்த்தி செய்து நடமாடும் சேவைநாள்களில் தத்தம் பாடசாலை மாணவர்களுக்கான கூட்டுக்காப்புறுதிகளை பெற்றுக்கொள்ளலாம்.

### பனை அபிவிருத்தி சபை

#### தொழிலாளர் காப்புறுதித் திட்டம்

பனை சார் சீவல் தொழிலாளர்களுக்கான ரூபா 100,000 /- பெறுமதியான விபத்துக் காப்புறுதித் திட்டத்திற்கு இதுவரை தங்கள் பெயர்களைப் பதிவு செய்த 2,000 க்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கான கூட்டுக் காப்புறுதிப்பத்திரம் வழங்கப்படும்:

இதற்கென விண்ணப்பித்த தொழிலாளர்கள் அவர்கள் சார்ந்த சங்கங்கள் அவற்றின் பிரதிநிதிகள் இந்த நடமாடும் சேவை நடைபெறும் திகதிகளில் யாழ் மத்திய கல்லூரியில், பனை அபிவிருத்தி சபை அலுவலகப் பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்;

தொழிலாளர்களுக்கான தனித்தனிக் காப்புறுதிப் பத்திரம் தொடர்ந்து மத்திய கல்லூரியில் இயங்கவுள்ள இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் விசேட கருமபீடம் ஊடாக தொழிலாளர்கள் பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது;

இது வரை விண்ணப்பிக்கத் தவறிய தொழிலாளர்கள் அவர்கள் சார்ந்த சங்கங்கள் ஊடாக இச்சேவையின் போது விண்ணப்பிக்கலாம்.

### மாணவர் புலமைப் பரிசில் திட்டம்

யாழ் மாவட்டத்தில் யுத்த அனர்த்தம் காரணமாக தமது சொந்த இடங்களை விட்டு இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழும் குடும்பங்களைச் சார்ந்த மாணவ, மாணவிகளுக்கான புலமைப்பரிசில் உதவித்திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகிறது.

இத்திட்டத்திற்கெனத் தெரிவு செய்யப்பட்ட மாணவ, மாணவியர் தமக்கான புலமைப்பரிசில்களை இந்த நடமாடும் சேவையின் போது பெற்றுக்கொள்ளலாம்;

### ஏனைய துறைசார் சேவைகள்

★ அடையாள அட்டைகளுக்கான விண்ணப்பங்களைப் பெறவும், பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை கையளிப்பதற்குமான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

★ கடவுச் சீட்டுகளுக்கான விண்ணப்பங்களை பெறவும், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை கையளிப்பதற்குமான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

★ மோட்டார் வாகனபதிவு திணைக்களத்திலிருந்து மோட்டார் வாகனச் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்குப் பரிசோதகர் வெகு விரைவில் வரவிருப்பதால், தாமதமின்றிப் பரிசோதனைகள் செய்து சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்குரிய படிவங்களைக் கையளிக்கலாம்;

★ கல்வி, உயர்கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் உட்பட உயர் அதிகாரிகள் பங்குபற்ற இருப்பதால் மத்திய கல்வி அமைச்சின் ஊடான தமது பிரச்சினைகளை முன்வைக்கும்படி கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்;

★ குவைத் நாட்டிலிருந்து இலங்கை திரும்பியவர்களுக்கான நஷ்டஈட்டுக் கொடுப்பனவுக்கான ஏற்பாடுகள்.

★ வடக்கு - கிழக்கு மாகாணசபையின் தலைமைச் செயலாளர் உட்பட மற்றும் அமைச்சுச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் வர இருப்பதால் இவற்றுடன் சம்பந்தப்பட்ட பொதுமக்கள், அரச அலுவலர்கள் தமது கோரிக்கைகளை முன்வைக்கலாம்.

★ யுத்த அனர்த்தங்களால் குடும்பத் தலைவர்களை இழந்தவர்கள், ஊனமுற்றவர்கள், உழைக்குந் திறனை இழந்தவர்களின் சுயதொழில் வாய்ப்புக்கான முன் உதவித் திட்டம் அறிமுகம் செய்து வைக்கப்படும்;

★ மீனவர்கள தொழில் புரியும்போது அவர்கள் எதிர்கொள்ளும் உயிராபத்துக் காரணமாக மீனவர்களுக்கான காப்புறுதித் திட்டம் ஒன்றை அமுல் படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மீனவர்கள் அங்கம் வகிக்கும் சங்கங்கள் தத்தம் பிரதிநிதிகள் ஊடாக மீனவர்கள் தொடர்பான விபரங்களை வடக்கின் மீள்குடியேற்ற மற்றும் புனரமைப்பு அதிகார சபையின் அலுவலகப் பகுதியில் கையளிக்கவும்;

★ விவசாயிகளுக்கான விசேட ஓய்வூதியத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதால், விவசாயத் தொழிலில் ஈடுபடுவோர் அதனை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் நேரில் சமுகம் தரும வண்ணம் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்;

### தென்மராட்சி மக்களுக்கு...

பாரிய அழிவுகளைச் சந்தித்து முற்றாக சிதைவடைந்து போயுள்ள தென்மராட்சி பகுதியை மீள கட்டியெழுப்பும் பாரிய பணியினை ஆரம்பிக்க உள்ளதால் இப்பகுதி வாழ் மக்கள் இந் நடமாடும் சேவையின் போது வடக்கின் மீள்குடியேற்ற புனரமைப்பு அதிகார சபையினூடாக வழங்கப்படவுள்ள விசேட இழப்பு மதிப்பீட்டுப் படிவத்தைப் பெற்று உரிய ஆவணங்களுடன் சபைக்கு விண்ணப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

உதவித் திட்டங்களை முன்னெடுக்க பூரண மதிப்பீட்டின் தேவை அவசியமாதலால் பாதிப்புக்குள்ளாகிய மக்கள் தமது பதிவுகளை விரைவாக பூர்த்தி செய்யும்வண்ணம் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**குறிப்பு:- கல்லூரி முன்றலில் சேவை செய்யும் தொண்டர்களின் வழிகாட்டலைப் பெற்று சம்பந்தப்பட்ட அலுவலகப் பகுதிகளுக்குச்சென்று தத்தமக்குரிய சேவைகளை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

செயலாளர்,
வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும்
வடக்கு - கிழக்கின், தமிழ் விவகாரங்கள் அமைச்சு.

(கி-2825)

### இன்று ஒரு தகவல்

# இந்தியாவின் சுதந்திரம் நடுநிசியில் ஏற்பட்டதுஏன்?

1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி நடுநிசி 12.00 மணிக்கு இந்தியா பிரிட்டிஷாரின் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்று சுதந்திர இந்தியாவாக மலர்ந்தது.

ஏன் இந்த நடுநிசி அதிகார மாற்றம்?. இந்தியாவின் கடைசி வைஸ்ரோயாகவும் முதலாவது கவர்ணர்-ஜெனரலாகவும் இருந்த மவுண்ட் பாட்டன் பிரபு இரண்டு நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் இதற்கான விளக்கம் காணப்படுகிறது.

லாரி கொலின்ஸ், டொமினிக் லாம்பியர் ஆகிய இந்த இருவரும் ''நடுநிசியில் சுதந்திரம்'' என்ற நூலின் ஆசிரியர்கள் ஆவர்.

''மவுண்ட் பாட்டனும் இந்தியாவின் பிரிவினையும்'' என்ற நூலில் நடுநிசி சுதந்திரம் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது.

''ஆகஸ்ட் 15 ஐ இந்தியாவின் சுதந்திர நாளாக நான் (மவுண்ட் பாட்டன்) தெரிவு செய்வதற்குக் காரணம், அது யப்பானியர் சரணடைந்த தினம் என்பதாகும். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் யப்பானியர் சரணடைந்தார்கள். ஆனால் இந்த சுதந்திர தினத்தை ஒட்டி நான் சோதிடர்களைக் கலந்தாலோசிக்கவில்லை.

உங்களுக்குத் தெரியும். இந்தியர்கள் சோதிடத்தில் மூழ்கிப் போனவர்கள். நான் அதை உணர்ந்து கொள்ளவில்லை. அசுப வேளையில் எதனையும் செய்யக்கூடாது என்று இந்தியர்கள் நம்புகிறார்கள். நேரு சோதிடத்தை நம்பவில்லை என்பது உண்மையே ஆனால் மற்றவர்கள் நம்புகின்றார்கள் என்று அவர் கூறினார். நான் அசுப வேளை ஒன்றைத் தெரிவு செய்தேன். சோதிடர்களைக் கலந்து கொள்ளாமல் காலத்தைத் தேர்ந்தெடுத்ததில் நான் முட்டாள்தனமாக நடந்து கொண்டேன். நான் உண்மையில் அதை மறந்துவிட்டேன்.

நேரு கூறினார்: ''பரவாயில்லை. நீங்கள் ஏற்றுக் கொண்டால் நடுநிசியில் நாங்கள் ஒரு கூட்டத்தை நடத்தலாம். நடுநிசி 12.00 மணி அடிப்பதற்குச் சற்று முன் அதிகாரமாற்றத்தை நாம் அமுல்படுத்தினால் அது மேலும் சுபமுகூர்த்தமாக அமையும்.''

உலகம் உறங்கும் வேளையில் சுதந்திரத்தை அளிப்பது எத்தகைய அற்புதமான, கவர்ச்சியான கருத்து என்று நான் யோசித்தேன்.

இவ்வாறு நடைபெற்றது அது. கவர்ச்சியான தருணம் என்று நான் யோசித்ததால் அல்ல, நான் தவறான நாளைத் தெரிந்தெடுத்தபடியாலே ஆகும். சோதிடர்கள் அது அசுப முகூர்த்தம் என்று கூறியபடியாலே ஆகும்.'' □

வீ. சின்னத்தம்பி

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அடிப்படை மனித உரிமை மீறல்மனு தாக்கல்

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அடிப்படை மனித உரிமை மீறல் மனுவொன்றை நேற்று முன்தினம் மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவரும் ஜனாதிபதியின் சட்டத்தரணியுமான பாயிஸ் முஸ்தபாவிடம் கையளித்துள்ளது.

பொலிஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கு, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி சில்வா ஆகியோருக்கெதிராக சமர்ப்பிக்கப்பட்ட இம் மனுவை கட்சியின் தேசியத்தலைவர் ரவூப் ஹக்கீம் தாக்கல் செய்துள்ளார்.

பொலிஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கு மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி சில்வா ஆகியோர் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மேலதிக பாதுகாப்பிற்கு பொலிஸாரை வழங்க மறுத்தமையை ஆட்சேபித்தே இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ந-4)

## பட்டினிக்கெதிரான இயக்கத்தால் மீனவக் குடும்பங்களுக்கு கடற்றொழில் உபகரணம்

(மந்திகை)

வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள 360 மீனவர்களுக்கு கடற்றொழில் உபகரணங்களை வழங்குவதற்கு பட்டினிக்கெதிரான இயக்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த வகையில் ஒவ்வொரு குடும்பங்களுக்கும் தலா 5ஆயிரம் ரூபா பெறுமதியான கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன. (செ-23)

## இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னியில் ஷெல் வீச்சு

(வவுனியா)

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னி பிரதேசங்களை நோக்கி வவுனியா இராணுவக் கட்டளை தலைமையகத்தில் இருந்து படையினர் பலத்த ஷெல் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர் நேற்று முன்தினம் ஒரு மணி நேரம் படையினர் நடத்திய இத் தாக்குதலில் வவுனியா நகரம் அதிர்ந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் புலிகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதையடுத்தும் இராணுவ எல்லைப் பாதுகாப்பு நிலைகளுக்கருகில் புலிகள் அடிக்கடி தாக்குதலை நடத்து வதை அடுத்துமே இச் ஷெல் தாக்குதலை மேற்கொண்டதாக படைத்தரப்பு தெரிவித்துள்ளது

இதனால் ஏற்பட்ட சேத விபரம் குறித்து எதுவும் அறிய முடியவில்லை.

இதேவேளை ஓமந்தைப் பகுதியில் வீதிச் சோதனையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த படையினர் மீது புலிகள் கடந்த செவ்வாய் கிளைமோர்த் தாக்குதல் நடத்தியமையும் குறிப்பிடத்தக்கது. (ந-4)

## சாவகச்சேரிப்பகுதி வர்த்தக நிலையங்களில் ஏற்பட்ட சேதங்களை மதிப்பிட அனுமதி

(துன்னாலை)

சாவகச்சேரி நகரப் பகுதியில் யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்த வர்த்தக நிலையங்களைப் பார்வையிட்டு, சேதங்களை மதிப்பிட படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து நேற்றுமுன் தினம், சம்பந்தப்பட்ட வர்த்தக நிலைய உரிமையாளர்களும் மதிப்பீட்டுத் திணைக்கள அதிகாரிகளும் கடும் மழைக்கு மத்தியிலும் நேரில் சென்று சேதங்களை மதிப்பிட்டனர்.

இதேவேளை, மேற்படி வர்த்தக நிலையங்களில் ஏற்பட்ட சேதங்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவைப் பெறுவதற்கேற்ற வகையில் நேரிற் சென்று இழப்பீட்டை மதிப்பீடு செய்வதற்கு கைத்தொழில் வணிகர் மன்றம் எடுத்த பல்வேறு முயற்சிகள் பலனளிக்காமல் போனதும்,

கடந்த 28 ஆம் திகதி மேற்படி மதிப்பீட்டுக்கென 521 வது படையணியின் அனுமதி பெற்றுச் சென்ற குழுவினரை கைதடியில் உள்ள சிவில் நிர்வாக அலுவலகத்தில் அனுமதி பெற்றுவருமாறு அங்குள்ள படையினர் அவர்களை திருப்பியனுப்பியமையும் குறிப்பிடத்தக்கது. (உ-41)

## ஆற்றுகை வெளியீடு

(ஈச்சமோட்டை)

யாழ் திருமறைக் கலாமன்றத்தினரால் வெளியிடப்படும் நாடக ஆற்றுகை சஞ்சிகையின் ஒன்பதாவது இதழ் வெளியிடப்பட்டுள்ளது. (உ-59)

## மகரஜோதிப் பெருவிழா

(யாழ்ப்பாணம)

அகில இலங்கை சபரிமலை ஸ்ரீசாஸ்தா பீட 19-வது ஆண்டு மகரஜோதிப் பெருவிழா எதிர்வரும் 16-ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொழும்பு கொச்சிக்கடை ஸ்ரீசித்திவிநாயகர் ஆலயத்தில் மஹா கணபதி ஹோமத்துடன் ஆரம்பமாகவுள்ளது. (செ)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சமூகச்சீரழிவு ஒழிப்பு பற்றிய கலந்துரையாடல் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு நாவலர் கலாசாரமண்டபத்தில் யாழ். மாநகரசபை சுகாதாரக் குழுத் தலைவர் ம. மங்களநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது. (செ)

## வலம்புரி சிறுகதைப் போட்டி

(யாழ்ப்பாணம)

வலம்புரி இரண்டாவது ஆண்டு நிறைவினையொட்டி அமரர் ஆறுமுகம் கமலநாதன் ஞாபகார்த்தமாக நடத்தப்படும் சிறுகதைப் போட்டிக்கான சிறுகதைகளை அனுப்புவதற்கான கால எல்லை இம்மாதம் 28 ஆம் திகதியாகும.

நாட்டின் சமகால பிரச்சினைகளை பின்னணியாகக் கொண்டு கதைகள் எழுதப்பட வேண்டும. மேற்படி போட்டி குறித்து ஏற்கெனவே வலம்புரி இதழில் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ)

## பரிசளிப்பும் கலைவிழாவும்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை பரிசளிப்பு விழாவும், கலை விழாவும் எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப.1 00 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் பொ. கணேஸ்வரலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு யாழ். பல்கலைக்கழகபுவியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.ரி.பி இராஜேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், இளைப்பாறிய அதிபர் வி.ஏரம்பமூர்த்தி, வலி தெற்கு பிரதேச சபைத் தலைவர் க. கமலசேகரன், உடுவில் கோட்ட ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் வீ ஆ. இராமச்சந்திரன் ஆகியோர், சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்கிறார்கள். [செ]

## உலக சாதனை படைத்த இலங்கை விவசாயி

(கொழும்பு)

22 நிமிடத்தில்,40 தொன் எடையுள்ள ரெயில் பெட்டிகளை 150 அடிகள் பல்லால் இழுத்து இலங்கையைச் சேர்ந்த விவசாயி ஒருவர் உலக சாதனை படைத்துள்ளார்.

கொழும்பு கோட்டைப் பகுதியில் காமினி வசந்தகுமார [வயது39] என்பவரே இச்சாதனையை நிகழ்த்தியுள்ளார். [உ-239]

## யாழ். ஆஸ்பத்திரியில் பகலில் ஈத்தொல்லை இரவில் நுளம்புக்கடி நோயாளர் அவஸ்தை

யாழ். போதனா வைத்தியசாலையில் பகல்வேளையில் ஈக்களின் தொல்லையும் இரவு வேளைகளில் நுளம்புகளின் தொல்லையும் அதிகமாக காணப்படுகின்றன.

இதனால் நோயாளர்கள் பெரிதும் அவஸ்தைப்படுவதுடன், பல்வேறுபட்ட நோய்கள் வைத்தியசாலைப் பகுதியிலேயே பரவ வாய்ப்பு ஏறபட்டுள்ளது.

வைத்திய சாலையிலுள்ள கால்வாய்ப் பகுதிகளிலும் சுற்றுப்புறங்களிலும் நீர் தேங்கிநிற்பதையும் அவதானிக்க கூடியதாக உள்ளது. (உ-217)

## கால்நடைவளர்ப்போருக்கு இலவச உதவிகள்

(யாழ்ப்பாணம்)

செயற்கை முறைச் சினைப்படுத்தலின் மூலம் பிறந்த பசுக்கன்றுகளுக்கு இம்மாதம் முதல் மானிய அடிப்படையிலான உதவிகள் வழங்கப்படவுள்ளதாக கால் நடை வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்த வகையில் பசுக்களுக்கு காப்புறுதி செய்தல் இலவசமாக உணவு வழங்குதல், பூச்சி மருந்துகள் வழங்கல் கிடைக்குமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (செ-19-9)

## யாழ். வரவுள்ள தென்னிலங்கை சிங்களக் கலைஞர்கள் செல்லும் இடங்கள்

(யாழ்ப்பாணம)

திருமறைக் கலாமன்ற கலைப்பாலம் 2001 நிகழ்ச்சித் தொடரின் கீழ் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ள தென்னிலங்கை சிங்களக் கலைஞர்கள் எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை பின்வரும் இடங்களில் சிங்கள பாரம்பரிய கலை வடிவங்களையும் பல்வேறு கலை நிகழ்வுகளையும் செய்து காண்பிக்கவுள்ளனர்.

14 ஆம் திகதி மாலை 6.30 மணி யாழ். திருமறைக் கலாமன்ற அரங்கு. 16 ஆம் திகதி பி.ப. 3.30 மணி வேம்படி மகளிர் கல்லூரி 17 ஆம் திகதி காலை 9 30, பி.ப.2.30 பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி, 18 ஆம் திகதி மு.ப. 10 00 மணி மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி பி.ப.2.00 மணி மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி

இத்தவேளை, அவர்கள் இங்குள்ள கலைஞர்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், சமூகத் தலைவர்கள், இலக்கிய வாதிகள் ஆகியோரைச் சந்திப்பதோடு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும் பார்வையிடவுள்ளனர். (உ-106)

## சிந்தனைக்கு விருந்து

### மானம் அழிந்த தம்பி

கசிப்பிலே மாறாத காதல் மிகுதம்பி
புசிப்பிற்காம் மா அரிசி விற்றும் - தசைவற்றிப்
போன மனைவியின் பொன்னணிகள் ஈடுவைத்தும்
ஆனபயன் மானம் அழிவு

'பழையவன்'

# உயர்தரமாணவர்களுக்கான அறிவியல் வினாக்கள்

## இல: 82 தொகுப்பு ரீ. மயூரன்

பொது அறிவுப்பகுதி நாளை நடைபெறவுள்ள கூட்டுறவுப் பரிசோதகர் பரீட்சை சம்பந்தமான விடயங்களை உள்ளடக்கி தொகுக்கப் பட்டுள்ளது. [-ஆ - ர்-]

### பொது அறிவு

★ **1-10 வரையான வினாக்களுக்கு தரப்பட்ட 4 விடைகளில் சரியானதைத் தேர்ந்தெடுக்க.**

1) சர்வதேச கூட்டுறவு ஒழுங்கமைப்பு எவ்வாண்டில் ஆரம்பமானது?
1. 1888 2. 1844 3. 1866 4. 1855

2) இலங்கையில் கூட்டுறவு இயக்கத்தை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக இருந்த பிரித்தானிய ஆளுநரின் பெயர் யாது?
1. ஹென்றிபோட் 2. ஹென்றிடுனாட்
3. ஹென்றி மக்லம் 4. டொனமூர்

3) சர்வதேச கூட்டுறவு ஒழுங்கமைப்பின் தலைமையகம் அமைந்துள்ள நாடு?
1. இங்கிலாந்து 2 நோர்வே
3. சுவிச்சர்லாந்து 4. ஜேர்மனி

4) இலங்கை கூட்டுறவு திணைக்களம் எவ்வாண்டு ஆரம்பிக்கப்பட்டது?
1. 1929 2. 1930 3. 1919 4. 1912

5) உலக சிக்கன தினம் ஆண்டின் எத்திகதியில் இடம் பெறுகிறது?
1. ஜூலை மாதம் முதலாம் சனிக்கிழமை
2. ஜூன் மாதம் மூன்றாவது ஞாயிறு
3. மே மாதம் முதல் ஞாயிறு
4. மார்ச்மாதம் முதல சனிக்கிழமை

6) கூட்டுறவு இயக்கத்தின் தந்தை என போற்றப்படுபவர் யார்?
1. மாசேதுங் 2. லெனின்
3. றொபெட்ஓவன் 4. அடைஸ்ஜோன்

7) இலங்கையில் முதலாவது கூட்டுறவு மாநாடு எங்கே நடைபெற்றது?
1. கண்டி 2. கொழும்பு 3. காலி 4. யாழ்ப்பாணம்

8.) 1970 ஆம் ஆண்டில் சகல கூட்டுறவு வங்கிகளையும் எவ்வங்கி பொறுபபேற்றுக் கொண்டது?
1. இலங்கைவங்கி 2 மக்கள் வங்கி
3. மத்தியவங்கி 4. உலகவங்கி

9) இலங்கையில் முதன்முதல் வெளியிடப்பட்ட தமிழ் கூட்டுறவுப் பத்திரிகை எது?
1. கூட்டுறவாளன் 2. தமிழ்கூட்டுறவு
3 ஐக்கிய நேசன் 4. ஐக்கிய தீபம்

10) ஆரம்பத்தில் பிரித்தானிய கூட்டுறவு வரலாற்றில் எத்தனை கொள்கைகள கடைப்பிடிக்கப்பட்டன?
1. 6 2. 7 3. 8 4. 9

★ **சுருக்கமான விடை தருக.**

11) உலகில் முதன் முதல் கடன் அட்டை (CREDITCARD) முறையை அறிமுகப்படுத்திய நாடு எது? (— — — —)

12) இலத்திரனியல் அஞ்சல் (E-mail) அனுப்புவதற்கு அவசியம தேவைப்படும் முக்கிய மூன்று கருவி/பொறிகளும் எவை? (— — — —)

13) இடாகா (IDACA) எனும் குறும் பெயரால் அழைக்கப்படும் பிரசித்து பெற்ற கூட்டுறவு ஒழுங்கமைப்பு எந்நாட்டில் உள்ளது? (— — —)

14) 1937 இல் உருவான கூட்டுறவு மேற்பார்வை சங்கத்தின் தலைவராக இருந்தவர் யார்? (— — — —)

15) 1935 இல் கூட்டுறவு வைத்தியசாலை எங்கு அமைக்கப்பட்டது? (— — — —)

★ **A பகுதியில் சம்பவங்களும் B பகுதியில் நடைபெற்ற ஆண்டும் தரப்பட்டுள்ளது. சரியானவற்றுடன் தொடர்பு படுத்துக.**

| A | B |
|---|---|
| 16) கூட்டுறவு மொத்தஸ்தாபனம் நிறுவப்பட்டது | 1964 |
| 17) முதன்முதல்கூட்டுறவுக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது | 1895 |
| 18) சர்வதேச கூட்டுறவு ஒழுங்கமைப்பு உருவானது | 1930 |
| 19) கூட்டுறவு திணைக்களம ஆரம்பமானது | 1952 |
| 20) கூட்டுறவு கிராமிய வங்கி உருவானது | 1943 |

### நுண்ணறிவு

★ **21-25 வரையான வினாக்களிற்குதொடக்கத்திலே மூன்று ஆங்கிலச் சொற்கள் தரப்பட்டுள்ளன. இச் சொற்களுக்குரிய மூன்று எண் குறியீடுகளும் ஒழுங்கின்றி தரப்பட்டுள்ளன. இவற்றைப்பரிசீலித்து தரப்பட்ட நான்காவது ஆங்கிலச் சொல்லுக்குரிய எண் குறியீட்டை கண்டறிந்து புள்ளிக்கோட்டில் எழுதுக.**

21) BOLT, RETOLD, GATE - 359874, 6195, 2879
GREAT... ... ...

22) MODEL, SEAT, SOLD - 6287, 6431, 54123
SLATE... ... ...

23) TAIL, TRIAL, LATER- 24136, 1452, 16542
RELATE... ... ...

24) MANCH, BOND, POTA- 82361, 4537, 9502
BAND... ... ...

25) GATE ROAD, PADE - 2314, 5176, 8146
DATE... ... ...

★ **சரியான விடையின் கீழ் கீறிடுக.**

26) 17m× 8m× 2m அளவுள்ள பெரிய பரற் குவியலில் இருந்து எத்தனை 2m× 1m× 50Cm அளவுள்ள பரற் குவியல்களை ஆக்கலாம்?
1. 327 2. 308 3. 272 4. 173

27) அகலத்தின் இரு மடங்கான நீளமுள்ள செவ்வகக்காணி ஒன்றின் பரப்பு 64800 m² ஆயின் அதன் அகலம்யாது?
1. 140 m 2. 180m 3. 260m 4. 220m

28) குறித்த எண் ஒன்றினால் 1594, 1706, 1810 ஆகியனவற்றை வகுக்கும போது சமமான மீதியேகிடைக்கும் அவ்வெண் யாது?
1. 8 2. 6 3. 10 4. 12

29) தரப்பட்ட ஆண்டுகளில் ஓர் ஆண்டுஏனைய ஆண்டுகளில் இருந்துவேறுபடுகிறது அவ்வாண்டு எது?
1. 1894 2. 1978 3. 1680
4. 1866 5. 1979 6. 1888

30) பொருத்தமற்ற சொல்லின் கீழ் கீறிடுக?
1. AUGUST 2. SEPTEMBER 3. OCTOBER
4. NOVEMBER 5. DECEMBER

★ **கீழே தரப்பட்டுள்ள பதங்களுக்கு பொருந்தக் கூடிய இரகசியக் குறியீடுகளை இனங்கண்டு அப்பதங்களை அடைப்புக்குறியினுள் எழுதுக.**

சண்டமை, தண்டுலம், கடலரண், சந்திரன், தினகரன், கந்சரம்

31) AXOSN ... ... ... ...
32) WXYSZ ... ... ... ...
33) YMASZ ... ... ... ... ...
34) ACQSB ... ... ... ...
35) OBPQN ... ... ... ...
36) ABCMN ... ... .. ... ...

★ **பந்தியை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.**

ஆறு கார்கள தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டுள்ளன. கறுப்புககார் ஓர் முடிவில் நிற்கிறது. நீலக்கார் கறுப்புக்காருக்கு பக்கத்தில இல்லை - நீலக்கார கறுப்புக்காரில இருந்து இரண்டாவது தரிப்பில் நிற்கிறது பச்சைக்கார் கறுப்புக் காரிலிருந்து மூன்றாவது தரிப்பில் நிற்கிறது. வெள்ளைக்கார் சிவப்புக காருக் கருகேஉள்ளது. மஞ்சள்கார் சிவப்புக் காரிலிருந்து மூன்றாவது தரிப்பில்நிற்கிறது.

37) வெள்ளைக்கார் எந்தகார்கட்கு இடையில் உளளது?
38) பச்சைககாருக்கு அதி தொலைவில் உள்ள காரின் நிறம் என்ன?
39) இரண்டு அந்தங்களிலும் உள்ளகார்களுக்கு அருகில் நிற்கும் கார்களின் நிறம் என்ன?
40) மஞ்சள் காருக்கு இருபுறமும் நிற்கும் கார்களின் நிறமும் எவை?

**குறிப்பு-:**

விடைகளை வேறுதாளில் எழுதி அனுப்பவும். இதற்கான விடைகளை 14.11.2001 இற்கு முன் எமக்குக் கிடைக்கத் தக்கதாக அனுப்பிவைக்கவும்.

**அறிவியல் பகுதி**
**வினா இல: 82**
**"வலம்புரி"**
**இல: 15வெள்ளாந் தெரு,**
**யாழ்ப்பாணம்.**

மாணவர் முழுப்பெயர்! ____________

சொந்த முகவரி. ____________

கற்கும் பாடசாலை ____________

மாணவர் கையொப்பம்! ____________

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பி வைக்கவும்.

## அறிவியல் வினா இல-81 விடைகள்

1) ஏப்ரல் 7
2) சிங்கப்பூர்
3) ஜெனிவா
4) நீர் வழகான்
5) வயிற்றில்
6) டிசம்பர் 6
7) டிசம்பர் 16
8) ஒகஸ்ட் 15
9) மே 27
10) ஒகஸ்ட் 17
11) ஆசிய அபிவிருத்திவங்கி
12) தென்கிழக்காசிய நாடுகள் கழகம்
13) சர்வதேசதொழிலாளர் ஸ்தாபனம்
14) சர்வதேச நாணய நிதியம்
15) சர்வதேச நிதிக்கூட்டுத் தாபனம
16) கியுபா
17) கியுலெக்ஸ்
18) 37
19) ரோம்-இத்தாலி
20) இந்தியா
21) உ
22) 35
23) I
24) E 11
25) 27
26) ச்றினேன்மு ல்செ
27) ப்கிந்துப குங்வான்பி
28) ஒன்றாக ஓடிச்செல்
29) வானத்தை அவதானி
30) புகை எழுகிறது?
31) மின்சாரம:வயர்
32) மல்லிகை:நறுமணம்
33) பாம்பு:ஊர்வன
34) தவறிழைத்கல்: குற்றம்
35) MANC:AMCN
36) ABC
37) AC
38) D
39) E
40) A,C

## அறிவியல் வினா இல. 81

**அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம்.**

- தருசங்கர், பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்.
- பு கோபிறாஜ், புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி.
- ர. கேசவன். கொக்குவில் இந்துக் கல்லூரி.
- பா. சிவசங்கர், வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி.
- வி. பிரியா, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி.
- செ. நிம்றோ, வட்டு: யாழ்ப்பாணக் கல்லூரி
- உ. சுமலதா, வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி.
- த. கார்த்திகா, சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
- சி. சயந்தன், வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி.

## இன்று சமயதீட்சை

(கொழும்புத்துறை யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரின் ஏற்பாட்டில் வெள்ளிக்கிழமை காலை 8 30 மணிமுதல் சமய தீட்சை வழங்கப்படவுள்ளது.

ஏழு வயதிற்கு மேற்பட்ட இருபாலாருக்கும் தீட்சையளிக்கப்படும் என மேற்படி சபையினர் தெரிவித்துள்ளனர். (செ-223)

## மண்ணெய் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வலி கிழககு தென்பகுதி ப. நோ. கூ. சங்கத்தின் கிளைகள் மூலம் பங்கீட்டு அட்டைக்கு2 லீற்றர் என்ற வீதத்தில் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டுவருகின்றது.

லீற்றர் 23 ரூபா விலையில் இவ்வாறு வழங்கப்படுகிறது.

இதேவேளை தனியார் கடைகளில்ஒருலீற்றர்35 ரூபாவாக விற்பனை செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது. (உ-9)

### வருங்கால

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

கற்க வேண்டியவற்றில் அநேகமானவற்றை பாடசாலையில் கற்பிக்கப்படுவதற்கு முன்னரேயே கற்றுவிடுவதால் பாடசாலை ஆசிரியர்களிடம் எதையும் புதிதாகக் கற்க வேண்டிய தேவை மாணவனுக்கு இல்லாமலே போகின்றது.

தமக்குத் வேவைப்படும் போதுதான் கடவுளிடத்தே கூட மதிப்பைக் காட்டும் சராசரி மனித சமுதாயத்தின் ஒரு பிரிவினரே மாணவர்களும். எனவே, பாடசாலை ஆசிரியர்களின் சேவையைப் பெற வேண்டிய தேவையற்ற நிலையில் மாணவரிடையே ஆசிரியர்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய மதிப்புக் குறைவது அதிசயமானதொன்றன்று. இந்நிலையை மாற்ற ஒவ்வொரு ஆசிரியனும் முயல வேண்டும். ஆசிரியன் என்போன் ஆசிரியத்திற்கு தகுதியானவனாகவும் அத்தொழிலுக்குதன்னை முழுமையாக அர்ப்பணித்தவனாகவும்வாழ வேண்டும். இன்று பெரும்பாலான ஆசிரியர்களிடம் ஆசிரியத்திற்குரிய குணவியல்புகள் அருகிவருவதை கல்வியியலாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். ஆசிரியன்ஒருவன் மாணவனுக்கு கல்வி புகட்டுபவனாக மட்டும் செயற்படுவதில்லை. மாணவர்களுக்கு வழிகாட்டியாகவும் விளங்குகின்றான். எனவே ஆசிரியர்கள் குணசீலர்களாக பண்பும் பரந்த நோக்கும் உள்ளவர்களாக கடமைக்கு முதன்மை கொடுப்பவர்களாக, மாணவர்களின் உயர்விலேயே கண்ணாயிருப்பவர்களாக இருக்க வேண்டும். மேலும் ஆசிரியர்கள் மாணவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து அவர்களின் மதிப்பைப் பெறவேண்டுமாயின் அவர்கள் வாழ்நாள் முழுவதும் கல்வித்தேடலை உடையவர்களாக இருக்க வேண்டும். இங்கு பதவி உயர்வுக்காக ஆசிரியர் கற்கும் கல்வியை நான் குறிப்பிடவில்லை. ஆசிரியத்தை உயர்த்தும், மாணவர்களின் எதிர்பார்ப்பை ஈடுசெய்யும் கல்வியையே கூறுகின்றேன். இவற்றை உணர்ந்து ஆசிரியர்கள் செயற்பட்டால் ஆசிரியர்கள் கட்டாயம் மாணவர்களின் மதிப்பை பெறுவார்கள். அத்துடன், மாணவர்களைப் பண்பறிவுள்ளவர்களாக மாற்ற நல்ல வழிகாட்டியாகவும் விளங்குவார்கள் என்பதில் ஐயமில்லை.

பெற்றோரும் ஆசிரியரும் நல்ல பண்புள்ள மாணவர் சமுதாயத்தை உருவாக்க முயற்சி செய்தால் நாளைய நல்ல சமுதாயம்உருவாவதற்குப் பங்களிப்பு செய்தவர்கள் ஆவார்கள். □

# அறிவித்தல்

## வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சு

## இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

இம்மாதம் 10ம் 11ம திகதிகளில் யாழ் மத்திய கல்லூரியில் இடம் பெறவுள்ள குறைநிவிர்த்தி சேவையின்போது இந்து சமய கலாசாரத் திணைக்களத்தால் நடைமுறைப்படுத்தப் படவுள்ள திட்டங்கள்

★ நலிவுற்ற கலைஞர்களுக்கான உதவித்திட்டத்தின் கீழ் உதவி பெறவிரும்பும் பாதிக்கப்பட்ட கலைஞர்கள் அல்லது அவர்களது குடும்ப உறுப்பினர்கள் உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் நேரில் வரவும்.

★ அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான (எல்லா வகுப்பும்) சைவ சமய கைநூல்கள் வழங்கப்பட உள்ளதால் பதிவு செய்யப்பட்ட பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

★ இதுவரை தமது ஆலயங்களில் இந்து மன்றங்களில் அறநெறிப் பாடசாலையை நிறுவத் தவறிய ஆலய பரிபாலன சபைகள், நிர்வாக சபைகள் தர்மகர்த்தாக்கள இதற்கான விண்ணப்பப் படிவத்தை பெற்று இவ்வருட முடிவிற்குள் அறநெறிப் பாடசாலைகளை நிறுவும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

★ மூத்த கலைஞர்களை கௌரவிக்கும் வைபவம் 18 - 11 - 2001 இல் நல்லூரில் அமைந்துள்ள துர்க்கா தேவஸ்தான மண்டபத்தில் நடைபெற உள்ளதால் மூத்த கலைஞர்கள் தெரிவிற்கான பெயர்களை அனுப்பி வைக்கும்படி கலை கலாசார அமைப்புக்கள் இதன் வாயிலாக கோரப்படுகிறார்கள்.

**பணிப்பாளர்**
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

(கி-2842)

# அறிவித்தல்

## அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்குக் கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சு

## பனை அபிவிருத்தி சபை

சீவல் தொழிலாளர்களுக்கான சங்கங்களும் அவற்றின் அங்கத்தவர்களும் எண்ணிக்கையும் வருமாறு

| கிளை இல | பனை தென்னை கூட்டுறவுச் சங்கக் கிளைகளின் பெயர்கள் | விண்ணப்பித்த அங்கத்தவர்கள் மொ. எ |
|---|---|---|
| 254, 256, 258, 259, 260 | | |
| 255, 261, 262, 264, 265 | | |
| 266 | அச்சுவேலி | 347 |
| 67, 73, 74, 75, 76 | பண்டத்தரிப்பு | 155 |
| 109, 110 111, 112, 114 | தெல்லிப்பழை | 107 |
| 94, 101, 95, 96, 102 103 | | |
| 99, 74 | ஊர்காவற்றுறை | 98 |
| | யாழ்ப்பாணம் | 91 |
| | கரவெட்டி | 189 |
| | பருத்தித்துறை | 184 |
| | அரியாலை | 69 |
| | கோப்பாய் | 243 |
| | மானிப்பாய் | 314 |
| | சங்கானை | 241 |
| | பளை | 154 |
| | வேலணை | 83 |
| | அனலைதீவு | 65 |
| | சாவகச்சேரி | 54 |
| | கோண்டாவில் | 281 |
| | காரைநகர் | 73 |
| | கொடிகாமம் | 64 |

★ சபையால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள மேற்படி ஆயுள் காப்புறுதித் திட்டத்திற்கு இதுவரை விண்ணப்பித்த பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களினதும் அவைசார்ந்த அங்கத்தவர்களின் எண்ணிக்கையும் வெளியிடப்பட்டுள்ளது.

★ முதல் கட்டமாக ஒவ்வொரு சங்கங்களுக்கும் தனித் தனியாக அவர்களது மொத்த அங்கத்தவர்களுக்குமான கூட்டுக் காப்புறுதிப் பத்திரங்கள் சங்கப் பிரதிநிதிகளிடம் வைபவரீதியாக கையளிக்கப்படும். (இப்பத்திரத்தினூடாக அனைத்து அங்கத்தவர்களுக்கும் காப்புறுதிப் பணம் செலுத்தப்பட்டு அவர்களுடைய ஆயுள் காப்புறுதி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது)

★ தொடர்ந்து 2ம கட்டமாக ஒவ்வொரு தொழிலாளருக்குமான தனித் தனிக் காப்புறுதி அட்டைகள் வழங்கப்படும். (இது அவர்களது தனிப்பட்ட உறுதிப்படுத்தலுக்கு வழங்கப்படும்)

★ இவ் ஆயுள் காப்புறுதித் திட்டத்தில் இதுவரை இணைந்து கொள்ளாத சங்கங்கள் இருப்பின், இம் மாதம 11ம் திகதிக்கு முன் இணைந்து கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

**விஷேட குறிப்பு**

கடந்த 5 ஆண்டு காலப்பகுதியில் தொழிலாளர்கள் எவரேனும் தொழிலில் ஈடுபட்டிருந்த போது விபத்துக்குள்ளாகி மரணமாகி இருந்தால் ஊனமுற்றிருந்தால் அது தொடர்பாக உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் பாதிக்கப்பட்ட குறிப்பிட்ட குடும்ப அங்கத்தவர் இம்மாதம் 10ம் 11ம் திகதிகளில் யாழ் மத்திய கல்லூரியில் நடைபெற உள்ள நடமாடும் அமைச்சின் சேவையின் போது அங்குள்ள பனை அபிவிருத்திசபை காரியாலயத்திற்கு நேரில் வரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

★ பாதிக்கப்பட்ட மேற்படி குடும்பத்தவர்களுக்கு அவர்களின் பிள்ளைகளின் கல்விக்கோ அல்லது விதவையாக்கப்பட்ட தாய்மாருக்கு சுய தொழில் ஊக்குவிப்புத் திட்டம் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

(கி-2841)

**பனை அபிவிருத்திச் சபை**
நிறைவேற்றுப் பணிப்பாளர்

# அமெரிக்காவின் வஞ்சகம்

சிறு பொருள்களின் கடவுள் (God of small Things) என்ற ஆங்கில நாவலை எழுதி பிரிட்டன், பிரான்ஸ் அரசுகளின் அதி உன்னத பரிசுகளைப் பெற்ற அருந்ததி றோய் எழுதிய ஆங்கிலக் கட்டுரையின் தமிழாக்கம்

தமிழில்; கபிலர்

பென்டகன் மீதும் உலக வர்த்தக நிலையத்தின் மீதும் செப்டெம்பர் 11 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட மனச்சாட்சிக்கு விரோதமான தற்கொலைத்தாக்குதலின் பின்பு ஓர்அமெரிக்க செய்தி ஒலிபரப்பாளர் பின்வருமாறு செய்தியை வாசித்தார். 'தீமையும் நன்மையும் இவ்வாறு வெளிப்படையாக ஒருபோதும் தம்மை வெளிக்காட்டியதில்லை' இதற்கு மேல் அவரால் வாசிக்க முடியவில்லை விம்மி அழுதார்.

## இயல்பு உணர்ச்சி

அமெரிக்கா இப்போது முன்பு ஒருபோதும் யாரென்று தெரியாத மக்களுக்கு எதிரான யுத்தத்தை முன்னெடுத்துள்ளது. ஏனெனில் அந்த மக்கள் அதிகமாக தொலைக்காட்சியில் தோன்றுவதில்லை சரியாக எதிரியை அடையாளம் காணாது, எதிரியின் தன்மையை விளங்கிக் கொள்ளாது அமெரிக்க அரசாங்கம் பயங்கரவாதத்திற்கு எதிரான அனைத்துலக கூட்டு International Coalition Agairst Terror) என்று அவசரமாகவும், கவர்ச்சிகரமாகவும் விளம்பரம் செய்து இராணுவத்தையும் விமானப்படையையும் யுத்தம்புரியும் வண்ணம் கட்டவிழ்த்து விட்டது.

**பெட்டிகளை வெட்டும் ஆயுதங்கள் பேனாக் கத்திகள் உள்ளத்தில் கிளர்ந்தெழும் ஆவேசம் இவைகளை ஆயுதங்களாகக் கொண்டே புதிய நூற்றாண்டின் யுத்தம் நடக்கப் போகிறது.**

உலகத்தில் மிகவும் சக்தி வாய்ந்த ஒருநாடு தனது இயல்பு உணர்ச்சிகளால் உந்தப்பட்டு கோபப்பெருக்கு கொந்தளிக்க புதுவிதமான யுத்தத்தைச் செய்கிறது.

அமெரிக்கா தன்னைப்பாதுகாக்க வேண்டிய நிலை திடீரென்று வந்தபோது. அதன் யுத்தக்கப்பல்கள், குரூஸ் ஏவுகணைகள், எவ் 16 ஜெற் விமானங்கள் அனைத்தும் காலாவதியான, மிதமிஞ்சிய பொருள்களைப் போல் ஆ[illegible] விட்டன. அணுகுண்டுகள் பெறுமதியற்றுப் போயின.

பெட்டிகளைவெட்டும் ஆயுதங்கள், பேனாக்கத்திகள், உள்ளத்தில் கிளர்ந்தெழும் ஆவேசம் இவைகளை ஆயுதங்களாகக் கொண்டே புதிய நூற்றாண்டின் யுத்தம் நடக்கப்போகின்றது. தர்ம ஆவேசம்தான் பூட்டுக்களை உடைக்கின்றது. அது சுங்கப் பகுதியின் கண்களுக்குப் புலப்படாது ஊடுருவுகின்றது. எனவே பெட்டிகளைச் சோதனை செய்வதன்மூலம் அதைக்கண்டுபிடிக்க முடியாது.

அமெரிக்கா யாருடன் யுத்தம் செய்கிறது? செப்ரெம்பர் 20 ஆம் திகதி சமஷ்டி புலனாய்வு நிலையம் (Federal Bureau of Investigations) விமானத்தைக் கடத்தியவர்கள்பற்றிய அடையாளங்களில் தமக்கு சந்தேகம் இருப்பதாகக் கூறியது ஜனாதிபதி புஷ் 'அவர்கள் யாரென்று எமக்கு சரியாகத்தெரியும். எந்த அரசாங்கம் அவர்களுக்கு ஆதரவு கொடுக்கின்றது என்றும் தெரியும்' என்றும் அதே தினத்தில் கூறினார்.

புலனாய்வு நிலையத்திற்கும். அமெரிக்க மக்களுக்கும் தெரியாத சில விடயங்கள் ஜனாதிபதிக்குத் தெரியும் என்பது இதில் தொனிக்கிறது.

## ஆச்சரியப்பட வேண்டியது

யுத்த நுணுக்கங்கள், பொருளாதாரபலம் இவற்றின் காரணமாக தமது சுதந்திரம், ஜனநாயகம், அமெரிக்க வாழ்க்கைமுறை எல்லாம் தாக்குதலுக்கு உள்ளாகி விட்டன என்ற காரணத்தினால் தனது மக்களை அவற்றிற்கு எதிராக செயற்படச் அரசின்கடமை.

சோகம்தோய்ந்த அந்தச் சூழலில் ஆவேசம் மிக்க வன்செயலையும், கோபத்தையும் தூண்டி விடுவது மிகவும் சுலபமானது. இது உண்மையாய் இருப்பினும் அமெரிக்காவின் அடையாளச் சின்னங்களான பொருளாதார-இராணுவ மையங்கள் உலகவர்த்தக நிலையமும், பென்டகனும் தாக்குதலுக்கான இலக்குகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டமைகுறித்து ஆச்சரியப்படுவதில்நியாயம் இருக்கிறது ஏன் அமெரிக்காவின் சுதந்திரச் சிலை தேர்ந்தெடுக்கப்படவில்லை? தாக்குதலுக்கான கோபத்தின் மூலவேர் அமெரிக்க சுதந்திரத்திலும் அதன் ஜனநாயகத்திலும் இல்லை; அமெரிக்காவிற்கு வெளியே, அமெரிக்க இராணுவ பொருளாதார பயங்கரவாதம். கிளர்ச்சி, இராணுவ சர்வாதிகாரம், மத வெறி, விற்பனை செய்ய முடியாத கொலைகள் இவைகளைச் செய்தும் அவற்றிற்கு ஆதரவளித்தும் வந்தமைதான் காரணம்!.

அமெரிக்க மக்கள் இழப்புகளின் சோகச் சுமையால் கண்ணீர் ததும்பும் கண்களுடன் எந்த நேரத்தில் தமக்கு என்ன நடக்கும் என்று சொல்ல முடியாத நிலையில் உலகை நோக்குகிறார்கள்;

அமெரிக்க மக்கள் தாங்கள் அல்ல, தங்களது அரசின் கொள்கைகள் தான் மிகவும் வெறுக்கப்பட்டவை என்பதைஅறிய வேண்டும். அவர்களுடைய அசாதாரண இசைவிற்பன்னர்கள், எழுத்தாளர்கள், நடிகர்கள்,விளையாட்டு வீரர்கள், திரைப்படங்கள் உலக ரீதியாக உவந்து வரவேற்கப்படுகின்றனர். என்பதில் அவர்கள் சந்தேகம் கொள்ளக் கூடாது;

தாக்கப்பட்ட அமெரிக்க நகரங்களின் இடிபாடுகளில் நெருப்பை அணைக்க முயன்றவர்கள் மீட்புப் பணிகளில் ஈடுபட்டவர்கள், அதற்காகப் பாடுபட்ட உத்தியோகத்தர்கள் அனைவரது திரமிக்க செயல்கள் எம்மை ஈர்த்தன.

## தற்கொலைத் தாக்குதல்

விமானக் கடத்தல் காரர் என்ன நோக்கத்திற்காக அமெரிக்கக் கட்டடங்களில் விமானத் தற்கொலைத் தாக்குதலைச்செய் தார்கள் என்பது உலக மக்கள் பெரும்பாலானவர்களுக்குத் தெரியாது. அவர்கள் பிரபல்யமானவர்கள் அல்லர் அவர்கள் தற்கொலைத் தாக்குதலுக்கான குறிப்புகளையோ, அரசியல் செய்திகளையோ, விட்டுச் செல்லவில்லை. தாக்குதலுக்கான உரிமையை எந்தஅமைப்பும் கோரவில்லை. அச்செயல் விடுதலை பெறுவதற்கு மனிதனுடைய இயல்பான செயல் என்று தமது செயலில் அவர்கள் நம்பிக்கை வைத்துள்ளார்கள் அல்லது ஏதாவது அவர்களது விருப்பங்கள் என்று நினைவு கொள்ளத்தக்கதாக அதைச் செய்திருக்க வேண்டும்.

நாம் காணும் இந்த உலகத்தில் அவர்களது செயல் பெரிய துவாரத்தைத் தோண்டி விட்டது.

தகவல்களை அறியாத ஒரு நிலையில் அரசியல் வாதிகள், அரசியல் விமர்சகர்கள்,எழுத்தாளர்கள் (என்னைப் போன்றவர்கள்) தமது அரசியல் நோக்கில் தமது சொந்த விளக்கத்தை இதற்கு அளிப்பார்கள். எத்தகைய அரசியல் நிலையில் இத் தாக்குதல் நடை பெற்றது. என்று ஆராய்வதே நல்லது.

(தொடரும்)

---

# உலக தரிசனம்

## அமெரிக்க ஹெலியின் பாகங்கள் பார்வைக்கு

(காபூல்)

தலிபான்களால் சுட்டு வீழ்த்தப்பட்ட அமெரிக்க உலங்குவானூர்தியின் உடைந்த பாகங்கள் ஆப்கானிஸ்தானின் முன்னாள் அதிபர் மாளிகை முன் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

ஆனால் உலங்குவானூர்தி மோசமான காலநிலை காரணமாகவே வீழ்ந்து நொருங்கிய தென்றும் தலிபான்களின் தாக்குதலால் அல்ல என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது;

இதேவேளை, தலிபான்களால் சுட்டுக் கொலை செய்யப்பட்ட ஆப்கானின் முன்னாள் அதிபரின் உடலும் இதே இடத்தில்பொதுமக்களின்பார்வைக்குகட்டித்தொங்க விடப்பட்டது தெரிந்ததே;(உ-5)

## உலக வர்த்தக அமைச்சர்கள் மாநாடு

(டோகா)

உலக வர்த்தக அமைச்சர்கள் மகாநாடு கட்டார் தலைநகர் டோகாவில் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

142 நாடுகள் கலந்து கொள்ளும் இந்தமகாநாட்டில் போர் பற்றியும் உலகப் பொருளாதாரத்தில் பின்னடைவு பற்றியும் ஆராயப்பட இருக்கிறது;

இதேவேளை, இந்த மகாநாட்டை எதிர்த்து, குறிப்பாக உலக மயமாக்கல் கொள்கைகளை எதிர்த்து ஆர்பாட்டம் செய்தற்கும் முயற்சிகள் நடைபெறுவதாகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவினரை ஆர்ப்பாட்டம் செய்ய அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (து)

---

## பாலங்கள் தாக்கப்படும் என வெளியான செய்தியில் உண்மை இல்லையாம்

(வாஷிங்டன்)

கலிபோர்னியா உட்பட அமெரிக்காவின் முக்கிய பாலங்கள் மற்றும் முக்கியம் வாய்ந்த மையங்கள் பயங்கரவாதிகளினால் தாக்கப்படலாம் என்ற செய்தியில் எந்த உண்மையும் இல்லை என்று எஸ். பி. ஐ. நிறுவனம் தெரிவித்துள்ளது,

பாலங்கள் தகர்க்கப்படவுள்ளதாக கிடைக்கப்பெற்ற செய்தியின் விளைவாக பாலங்கள் தகர்க்கப்படவுள்ளதாக பாலங்களுக்கு அண்மையில் பாதுகாப்பினை தீவிரப் படுத்தியுள்ளதோடு மக்கள் பெரும் பரபரப்பு அடைந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

(உ-7)

---


**இலங்கை மின்சார சபை - யாழ். பிரதேசம்**

### மின்தடை பற்றிய அறிவித்தல்

மின்மார்க்கங்களில் அவசர திருத்த வேலைகள் செய்ய வேண்டியுள்ளதால் 11. 11. 2001 ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பி.ப 6.00 மணி வரையும் யாழ்ப்பாண குடாநாடு பூராகவும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின் பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றேன்;

இதனால் ஏற்படும் சிரமங்களுக்காகவும் மனம் வருந்துகின்றேன்,

பிரதேச மின் பொறியியலாளர்
இலங்கை மின்சார சபை
யாழ். பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.

'சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்'
இலங்கை மின்சார சபை.

(சி-2837)


---

## பிலிப்பைன்ஸில் புயல் அனர்த்தம் பலர் பலி; 110பேரைக் காணவில்லை

பிலிப்பைன்ஸ் நாட்டின்மத்திய மற்றும் தெற்குப் பகுதிகளில் வீசிய கடும் புயல் காரணமாக 64பேர் பலியானதுடன் மேலும் 110பேர்காணாமற்போயுள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது.

கடும்புயற்காற்றுக் காரணமாக வீடுகள் பலவற்றின் கூரைகளும் தூக்கிவீசப்பட்டதால்இவற்றுள் நெரியுண்டு பலர் இறந்திருக்கலாமெனவும் இதனால் உயிரிழப்புக்கள் மேலும் அதிகரிக்கலாமெனவும் அஞ்சப்படுகிறது;

சூறாவளியினால் பாதிப்படைந்த பகுதிகளில் பிலிப்பைன்ஸ் இராணுவம் துரித மீட்புப்பணிகளில ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது; (உ-5)

## வட.கூட்டணியினருக்கு நவீனபோர் ஆயுதங்களை அமெ. வழங்கியது

### தலிபான்களை வெற்றி கொள்ளவாம்

[காபூல்]

தலிபான்களுடன் எதிர்த்துப் போராடும் ஆப்கான் வடக்குக் கூட்டணியினருக்கு தாம் நவீன போராயுதங்கள் வழங்கியுள்ளதாகஅமெரிக்கப் பாதுகாப்புத்துறைச் செயலர் டொனால்ட் றம்ஸ்பீட் தெரிவித்துள்ளார்.

அண்மையில் மஷாரிஷரீப் நகரை நெருங்கிய வடக்குக் கூட்டணியினர், தலிபான்களுடன் போரிட முடியாமல் பின்வாங்கியதைஅடுத்துவடக்குக் கூட்டணியினரின் ஆயுத பலம் பற்றியும் தொடர்ந்து போர்புரியும் ஆற்றல் பற்றியும் அமெரிக்கா சந்தேகம் கொண்டிருந்தது;

இதனைச் சீர்ப்படுத்தும் வகையிலேயே அவர்களுக்கு நவீன ஆயுத தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், தலிபான்களுடன்போரிட்டுமஷாரிஷரீப் நகர் கைப்பற்றப்படும் பட்சத்தில் ஆப்கானிஸ்தான் மீதான தரை வழித்தாக்குதலைஇலகுவாகமேற்கொள்ள முடியுமெனவும்அமெரிக்காநம்பிக்கை | வெளியிட்டுள்ளது. (உ-5)

## அமெ. ஹெலி சுட்டு வீழ்த்தப்பட்டது

(காபூல்)

அமெரிக்காவின் இராணுவ ஹெலிகொப்டர் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளதாக தலிபான்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சுட்டுவீழ்த்தப்பட்ட இந்த ஹெலி பாகிஸ்தான் பகுதிக்குள் வீழ்ந்து நொறுங்கியதாகவும் இதில் பயணம் செய்த நான்கு அமெரிக்க வீரர்கள் கொல்லப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது;

இதேவேளை இக்ஹெலிகொப்டர் தலிபான்களால் சுட்டு வீழ்த்தப்படவில்லையென அமெரிக்கா தனது வழமையான பாணியில் தெரிவித்துள்ளது; (ந-5)

அழக்சொண்ட எல்லாம்அழப்
போம்இழப்பினும்
பிற்பயக்கும் நற்பாலவை

குறள்

# வலம்புரி

## எரிபொருள் தட்டுப் பாடா?

யாழ் குடாநாட்டில்திடீரென எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

பருத்தித்துறைக் கடற்பரப்பில் வைத்து தாக்கப்பட்ட எண்ணெய்க் கப்பலைஅடுத்தே இவ் எரிபொருள்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. -ஏற் படுத்தப் பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளால் தாக்கி எரிக்கப்பட்ட கப்பல் இராணுவத்திற்கு எரிபொருளை எடுத்து வந்ததாகப் புலிகள் தரப்பிலும் பொது மக்களின் பாவனைக்காக யாழ்பெற்றோலியம் கூட்டுஸ்தாபனத்திற்கு எரி பொருளை எடுத்து வந்த கப்பலையே புலிகள் தாக்கி அழித்துள்ளதாக படைத்தரப்பிலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இரு தரப்பினரின் தகவலகளின் பிரகாரம் தாக்கப்பட்ட கப்பல் எரிபொருள் ஏற்றி வந்த கப்பல் என்பது உறுதியாகிறது. ஆனால் ஏற்றி வரப்பட்ட எரிபொருள் பொது மக்களுக்குரியதா அல்லது படையினருக்குரியாதா என்பது ஆய்வுக்குரியது.


குறித்த கப்பல் பொது மக்களுக்குரிய எரி பொருளை ஏற்றிவந்த போது தாக்கப் பட்டதாக இருப பின் அதுஉடனடியான எரிபொருள் தட்டுப்பாட்டை குடாநாட்டில் ஏற்படுத்தாது ஏனெனில் பொதுவாக களஞ்சியங்களில இருப்பு முற்றாக முடிந்த பின்னரே பொருள்எடுத்து வரப் படுவதில்லை எந்தக் களஞ்சியங்களிலும் ஆகக் குறைந்த இருபபு மட்டமான ''தாங்கிருப்பு'' கட்டாயமாகப் பேணப்படும் இது திடீர் தாக்கங்களால் ஏற்படுகின்ற பொருள் தட்டுப் பாட்டைநிவர்த்தி செய்யும்.

பொதுவாக அரச களஞ்சியங்களைப் பொறுத்த வரையில்ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்குத் தேவையான பொருட்கள் ஆகக்குறைந்த இருப்புமட்டமாகப் பேணப்படும்-பேணப்படவேண்டும். இதுவே களஞ்சியமுகாமை.

இந் நிலையில் எரி பொருள் கப்பல் தாக்கப்பட்டவுடன் எரிபொருள் விநியோகம் தடைப் படுவதும் தட்டுப்பாடு ஏற்படுவதும் திட்டமிட்டு மேற் கொள்ளப் பட்டாலேயொழிய வேறு வழிகளால் ஏற்பட நியாயம்இல்லைஅத்தோடு எரிபொருள் கப்பல் தாக்கப்பட்டாலும் அதன் விநியோகம் பாதிக்காத வகையில் நடவடிக்கைஎடுப்பது ஒரு சிறந்தசிவில்நிர்வாகத்தின் கடமையாகும்.

வெள்ளி நற்சிந்தனை

# இஷ்டசித்திகளைப் பெற்று வாழ்வதற்கேற்ற வெள்ளிக்கிழமை விரதம் மகிமை வாய்ந்தது



சைவப் பெருமக்கள் நாட்களையும், நட்சத்திரங்களையும், திதிகளையும், சிறப்பான விரத நாட்களாகவும், வழிபாட்டுக்குரிய விழாக்கள் கொண்டாடும் தினங்களாகவும்போற்றிவருகின்றார்கள்.

### தனிச்சிறப்பு

இவ்விரதம்புனிதநாட்களாகக் கருதப்படும் தினங்களில் தனிச்சிறப்புடையது வெள்ளிக்கிழமை ஆகும். வெள்ளிக்கிழமை விரதத்தினைச் சுக்கிரவார விரதம் எனவும் அனுட்டிப்பார்கள். இந்த வாரத்தில் தமது இல்லிடங்களைத் துப்புரவாக வைத்திருப்பதுடன் சைவ உணவுகளை விரும்பி உண்பவர்களாகவும், ஆலய வழிபாடுகள், விழாக்கள், விரதங்களில் ஈடுபாடுடையவர்களாகவும், ஆலயங்களிற் கூட்டுப் பிரார்த்தனை, பஜனை ஆகியவற்றில் ஆர்வமுடையவர்களாகவும் இருப்பதனை நாம் காணலாம்.

### கந்தபுராணத்தில்

கந்த புராணத்திலே வெள்ளிக்கிழமை விரதத்தின் மகிமையைக் கீழ்க்காணும்பாடல் அழகாக எடுத்துக் கூறுகின்றது.

'என்னருஞ் சிறப்பின்
மிக்க
எழுவகை வாரந்தன்னுள்
வெள்ளி நாள் விரதந்
தானே
விண்ணவர் உலகங்காத்த
வள்ளறன் விரதமாகும்
மற்றது புரிந்தமே லோர்
உள்ளமே நினைத்த
வெல்லாம்
ஒல்லையின்முடியுமன்றே'

மேலும் முசுகுந்தச் சக்கரவர்த்தி வசிட்டமா முனிவரிடம்; சுக்கிரவார விரதமாகிய வெள்ளிக்கிழமைவிரதமானது முருகப் பெருமானுக்கு மிக மிக உகந்ததென்பதைக் கேட்டறிந்து. தானும் இவ்விரதத்தை அனுட்டித்து தான் நினைத்தசித்திகளைப்பெற்று அரசாட்சிநடத்தியதாகப்புராணங்கள் மூலம் அறியக் கூடியதாயுள்ளது.

### ஐப்பசியில்

வெள்ளிக்கிழமை விரதங்களிலும் வருடந்தோறும் வரும் ஐப்பசி மாதத்து வெள்ளிக்கிழமைகளில் தனிச்சிறப்புடன் விரதங்களும, விழாக்களும் அனுட்டிக்கப்படுகின்றன. ஐப்பசி மாதச் சுக்கிர

**நீர்வை மணி**

வாரங்களில் ஆலயங்கள் தோறும் விஷேட அபிஷேக ஆராதனைகளும், விழாக்களும் நடத்தப்படுகின்றன. வெள்ளிக்கிழமை விரதமிருக்க விரும்புபவர்களும் ஐப்பசிமாதம்முதல் வெள்ளியிலிருந்தே தொடர்ந்து விரதத்தைஆரம்பிப்பார்கள்.

சைவ சமயிகளுக்குப் பொதுவான நல்ல புனித நாளாகக் கருதப்படும் வெள்ளிக்கிழமை கலியுகவரதனாகிய கந்த வேள்ப் பெருமானுக்கு உகந்த முருக விரதமாகவும் போற்றி அனுட்டிக்கப்படுகின்றது மக்கட்கு அவரவர்விரும்பும் இஷ்ட சித்திகளைத் தர வல்லதான வெள்ளிக்கிழமை விரதவழிபாட்டு நன்நாளின் சிறப்புப் பற்றிக் கந்தபுராணத்தில் வரும் கந்தவிரதப் படலம் நன்கு விளக்கியிருப்பது காணலம்

### விரதம்

இவ்விரதத்தினை மக்கள் தம் இயல்பிற்கேற்ப தூய்மையுடன் உபவாசமாகவோ, அல்லது ஒருவேளைஉணவுடனோ இருந்து இறைவழிபாடுகளைச் செய்வது உகந்ததாகும்: நாமும் ஐப்பசி வெள்ளிக்கிழமை நன் நாட்களிலே விரதம் அனுட்டித்துஇறைவனை வேண்டுதல் செய்வதன் மூலம் நற்பேறுகளைப் பெற்று நல்வாழ்வு வாழ்வோமாக.

'வேண்டும் வரந்தரும்
வெள்ளி நல் விரதம்
விரும்பியாம் நோற்றிடின்
வினைகள் தீருமே' □

# வருங்கால சமுதாயம் நல்லபடி உருவாவதற்கு பெற்றோரும், ஆசிரியரும் பங்காற்றல் அவசியம்

பேராசிரியர் க. கந்தசாமி
B. Sc. (Hons) Ph. D.
பௌதிகவியல் பீடாதிபதி யாழ். பல்கலைக்கழகம்

இன்றைய மாணவ சமுதாயம் எனது காலத்து மாணவ சமுதாயத்தைக் காட்டிலும் பலவழிகளிலும் திறமையுள்ளது. இவர்களிடம் உளள திறமைகளை நெறிப்படுத்தி சமுதாயத்திற்கு பயன்படக் கூடியவர்களாகத் திசைப்படுத்தல் பெற்றோரினதும் ஆசிரியர்களினதும் கடமையாகும். இதில் பெற்றோரின் பங்களிப்பை ஆசிரியரின் பங்களிப்பிலும் குறைந்ததாக மதிப்பிட முடியாது எமது காலத்திலும் அதற்கு முந்திய காலத்திலும் கல்வியின் பிரதான நோக்கம் பண்புள்ள, பரந்த நோக்குள்ள சமுதாயத்தை உருவாக்குவதாக இருந்தது. பட்டம் பெறுவதும் அதன் மூலம் பதவிகளையும் வாழ்க்கை வசதிகளையும் தேடிக் கொள்வதும் அதற்கடுத்த நிலையில்இருந்தன. இதனால் அக்காலத்து ஆசிரியர்களுக்கு மாணவர்களைநெறிப்படுத்தி அவர்களை சமுதாயத்தில் நல்ல பிரசைகளாக்குவதில் எந்தப் பிரச்சினையும் இருக்கவில்லை. மாணவர்களை நெறிப்படுத்த வேண்டிய கடமையில் ஈடுபடும்போது பெற்றோரின் ஆதரவும் இருந்தது. ஆனால் இன்றுஅந்நிலை சற்று மாறியுள்ளது. பெரும்பாலும் பெற்றோர்களும் சிலசமயங்களில் ஆசிரியர்களும் மாணவர்கள் கல்வியில் உயர் பெறுபேறுகள் பெறவேண்டும் என்பதிலேயே விருப்பமுள்ளவர்களாக இருக்கிறார்களேதவிர அவர்கள குணசீலர்களாக இருக்கவேண்டும் என்பது பற்றி கவலைப்படுபவர்களாக இல்லை.

### பெற்றோரின் பங்கு முக்கியம்

பெறறோர்களினதும, ஆசிரியர்களினதும் இந்த மாற்றத்தால் இன்றைய மாணவ சமுதாயம் பண்பு குன்றியதாகவும், பரந்த நோக்கமற்றதாகவும் மாறுவதைக் காணக்கூடியதாக உள்ளது. இந்நிலையைத் தொடரவிடமுடியாது. சுவர்இருந்தால்தான் சித்திரம் தீட்டலாம். பண்பற்ற சமுதாயம் பலமுள்ளதாக இருக்க முடியாது. பலமற்ற சமுதாயத்தில் பட்டதாரிகள இருந்தால் கூட அதன் வீழ்ச்சியைத் தடுக்க முடியாது. எனவே மாணவ சமுதாயத்தை நெறிப்படுத்திசமுதாயவளர்ச்சியை ஏற்படுத்துதல் எல்லோரினதும தலையாய கடமையாகும். இதில் பெற்றோரின் பங்குதான் மிக அதிகமாகும். பெற்றோர்களினால் தான் தமதுபிள்ளைகளை அன்புடன் அணுகிப் புத்திமதிகளைக் கூறி அவர்கள் தீய பழக்கங்களைப்பழகுவதிலிருந்து இலகுவாகத் தடுக்க முடியும.

பெற்றோர்கள் தமது பிள்ளைகள் இன்று நாளொன்றின் கூடியகாலப பகுதியை வீட்டிற்கு வெளியே செலவிடுவதால் தீயபழக்கங்களின் பிடிக்குள் அகபபடுவதற்குச் சந்தர்ப்பம் கூடுதலாக உள்ளது என்பதை உணர்தல் வேண்டும். தமது பிள்ளைகள் படிக்கிறார்களா என்பதில் கவனமாக உள்ளதுபோல், அவர்கள் நல்ல குணசீலர்களாக வளர்கிறார்களா என்பதிலும் கவனம் செலுத்த வேண்டும். பிள்ளைகளுக்கு நல்ல புத்திமதிகளைக் கூறி பெரியோர்களை, சுற்றத்தாரை, ஆசிரியர்களை மதிக்கும் பண்புடையவர்களாக வளர்க்க வேண்டும், அத்துடன் தமது பிள்ளைகள் குற்றம் செய்யுமிடத்து அதனை அவதானிக்கும் அயலவர், சுற்றத்தார்பிள்ளைகளின் குற்றத்தை கூறும்போதுஅவர் கூற்றை ஆராய்ந்து தமது பிள்ளைகளை திருத்தவும், ஆசிரியர்கள் நெறிபபடுத்தின் ஆசிரியர்களுக்கு அனுசரணையாக இருக்கவும், மனப்பக்குவம் வாய்ந்தவர்களாக இருக்க வேண்டும்.

வீட்டிலும் கூட தமது பிள்ளைகள எவ்வாறு பிரயோசனமாகக் காலத்தை செலவழிக்கிறார்கள் என்பதை கவனிக்க வேண்டும். இன்றைய மாணவர்கள வீட்டில் கூடிய நேரத்தை தொலைக்காட்சி பார்பபதிலும், வானொலி கேட்பதிலும் கழிப்பதை அவதானிக்க முடியும். இவற்றில் பயனுள்ள அம்சங்கள பல இருநதாலும் படிக்கின்ற பிள்ளைகள தமது பாடத்தை படிப்பதில் கூடிய கவனம் செலுத்துதல் நன்று. இதை தமதுபிளளைகளுக்கு உணர்த்துவதுடன் தாமும் முன்மாதிரியாக வாழ்ந்து காட்ட வேண்டும்.

### ஆசிரியரை மதிப்பதில்லை

மாணவர்களின் குணநலன் பாதிப்புறுவதற்கு அவர்கள் தமது கல்விக்காக தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் செல்வதும் ஒருமுக்கிய காரணமாகும். இங்கு மாணவர்கள் கல்வியை பணம் கொடுத்தே பெறுகின்றனர். இதனால் இங்கு கல்வி புகட்டும் ஆசிரியர்களை வியாபாரிகளாகவே மாணவர்கள் பார்க்கின்றார்கள். இதனால் ஆசிரியர்பால் மாணவர் கொண்டுள்ள மதிப்பு இயல்பாகவே குறைகின்றது இந்த மனப்பாங்கால் பாடசாலையில் கல்வியூட்டும் ஆசிரியர்களும் மாணவரிடையே மதிப்புக் குன்றியவர்களாகின்றார்கள்; மேலும் தனியார் கல்வி நிறுவனங்களில் பாடவிதானத்தின்படி

(6ஆம் பக்கம் பார்க்க)

## தினசரி தியானம் போதனா முறை

காச்சச் சுடர் விடும் பொற் கட்டிபோல்
நின்மலமாய்ப்
பேச்சற்றவரே பிறவார் பராபரமே.

தாயுமானவர்

எண்ணிறந்த ஜீவர்களாகத் தோன்றியிருக்கும்சச்சிதானந்த சிவமே, உனக்குப் பாடம் புகட்டுதல் என்னும் எண்ணம் என் உள்ளத்தினுள் புகுந்து விடலாகாது.

பரதத்துவத்தைப் பழக்கத்தில்கொண்டுவருவதே நல்ல போதனா முறை, வெறும் பேச்சாளன் போதிக்க வல்லவனாகான்; உண்மைக்கு ஒப்ப வாழ்கின்றவனது ஒவ்வொரு செயலும் வலிவு மிகப் படைத்தது. ஒவ்வொரு சொல்லும் உள்ளத்தை மாற்றியமைக்கவல்லது. நல்வாழ்வு சர்வகாலமும் பாடம் புகட்டும் போதனா முறையாகிறது.

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்

# புலிகளின் மௌனத்தை தமிழ்கட்சி கூட்டமைப்பு தமக்கு ஆதரவாகக் காட்டிக் கொள்கிறது!

## அமைச்சர் டக்ளஸ் உரை

(யாழ்ப்பாணம்)

எந்தவொரு போராட்டம் என்றாலும் அது இருப்பவற்றை பாதுகாப்பதையும், பெற வேண்டியவற்றைப் பெறுவதையுமே இலக்காகக் கொண்டிருக்கவேண்டும். ஆனால் இங்கு போராட்டத்தின்பெயரால் உயிர் இழப்புக்களும், அழிவுகளும் தான் தொடர்கிறதேதவிர எவையும் பெறப்படுவதாகவும் இல்லை இருப்பவற்றை பாதுகாப்பதாகவும் இல்லை.

இவ்வாறு அமைச்சர் கே. என் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார் அலுவலகத்திற்கு வந்திருந்த பெரும் தொகையான மக்கள் முன்னிலையில் உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிடுகையில் இப்போது தேர்தல் வந்துள்ளது தேர்தலுக்காக கூட்டு சேர்ந்துகொண்டு சிலகட்சியினர் வந்துள்ளனர். இவர்களின் கூட்டமைப்பு வெறுமனே ஆசனங்களைப் பகிர்ந்து கொள்வதற்கானகூட்டே 1977 தேர்தலின் போதும் கூட்டு என்றார்கள் பதினேழு ஆசனங்களை வென்றெடுத்தவர்கள் பின்னர் கவிழ்த்துக் கொட்டினார்கள் 1989 தேர்தலின் போதும் கூட்டமைப்பு என்று கூறிக் கொண்டு வந்தார்கள் இப்போது மீண்டும் கூட்டு என்றனர் இது கூட்டல்ல வெறும் தேர்தல்கூத்து. தனித்தனியாக நின்றால் தோல்வி நிச்சயம் என்ற நிலையில் ஈ.பி.டி.பி யின் அரசியல் சக்தி கண்டு அஞ்சிக் கூட்டுச் சேர்ந்துள்ளன இந்தக் கூத்துக்கு ஒற்றுமையின் பெயராலும் ஐக்கியத்தின் பெயராலும் வாக்கு கேட்கின்றனர்.

அதற்காக எம்மை விமர்சிக்கின்றனர் எங்களை விமர்சிக்கக்கூடிய ஜனநாயக அரசியற் சூழலை தோற்றுவித்துக் கொடுத்தவர்கள் நாங்களே என்பதை பெருமையுடன் சொல்லிக் கொள்ளலாம்.

கூட்டமைப்பு என்று ஒரு புறத்தில் சொல்லிக் கொள்ளும் இவர்கள் மறுபுறத்தில் இலக்கங்களை முதன்மைப்படுத்தி பிரசாரம் செய்கின்றனர் ஒருத்தரை ஒருவர் புறம் கூறுகின்றனர் இவரை விட அவர் நல்லவர் அவரை விட இவர் வல்லவர் என்றெல்லாம் எடுத்துரைக்கின்றனர் இவர்களுக்கு ஒட்டுமொத்தமான ஒரு குறிக்கோளும் இல்லை மக்களுக்காகச் செய்யப்பட வேண்டிய வேலைகள் குறித்த தெளிவான இலக்கும் இல்லை

1989 பொதுத் தேர்தலின் போது புலிகள் மௌனமாக இருந்தமையை ஈரோஸ் பயன்படுத்திக் கொண்டது போல இப்போதும் புலிகளின் மௌனத்தை இவர்கள் தங்களுக்கு ஆதரவு எனக்காட்டிக் கொள்கின்றனர். ஆனால் புலிகளை பொறுத்தவரையில் பாராளுமன்ற தேர்தலில் அக்கறை காட்டுவார்கள் என்பது எதிர்பார்க்கப்பட முடியாது.

அப்படி ஒரு வேளை புலிகளின் ஆதரவு இக் கூட்டணியினருக்கு கிடைக்குமாயின் தேர்தலில் வென்ற பின்னர் பதவிகளை துறக்க வேண்டிய நிர்ப்பந்தம் இவர்களுக்கும் ஏற்படலாம் அல்லது கொழும்பிலேயே தங்கியிருக்க வேண்டிய நிலை வரலாம் இதில் எந்த நிலை ஏற்பட்டாலும் அது சாதாரண மக்களின் நலனுக்கு உகந்ததல்ல.

எனவே சுய சிந்தனையுடனும், தெளிவான குறிக்கோளுடனும் தொலை நோக்குடன் கூடிய செயற்திட்டங்களுடனும் செயற்படுபவர்களையே இந்தத் தேர்தலில் மக்கள் ஆதரிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார் இவ்வகையில் குடாநாட்டுமக்களின் ஏகோபித்த ஆதரவு கிடைக்கவேண்டுமென எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்ததாக ஈ.பி.டி.பியின் யாழ். தகவல் தொடர்புத் துறை விடுத்த பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது (கு)

# மதிப்பீட்டுப்பணி இன்று இல்லை

(யாழ்ப்பாணம்)

நேற்று நடைபெற்ற தரம் 9 இற்கான தமிழ்' சமூகக் கல்வியும் வரலாறும் ஆகிய பாடங்களின் பொதுப்பரீட்சைக்கான மதிப்பீட்டுபணி தவிர்க்க முடியாதகாரணத்தால் இன்று நடைபெறமாட்டாதென வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் வீ, இராசையா அறிவித்துள்ளார்.

இதற்கான திகதி பின்னர் தெரிவிக்கப்படுமெனவும் ஆசிரியர்கள் உரிய மதிப்பீட்டு நிலையங்களுக்குச் செல்லாது பாடசாலைகளுக்கு செல்லுமாறும் கேட்டுள்ளார்.

ஏனைய பாடங்களின் மதிப்பீட்டுப்பணி முன்னர் குறிப்பிட்டதுபோல் இடம் பெறுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். ந-9

## பிரபாவுடன்..

சிங்கப்பூருக்கு சென்று புலிகளின் பிரதிநிதி ஞானக்கோனுடன் என்ன கதைத்தார் என்பது எனக்குத்தெரியும்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசில் இருந்து 12 துரோகிகள் விலகியுள்ளனர் இவர்கள் தற்போது ஐக்கிய தேசியக்கட்சியின் கூட்டணியில் இணைந்துள்ளனர்.

தமிழ்த்தலைவர்களான ஆலாலசுந்தரம் நீலன் திருச்செல்வம் அமிர்தலிங்கம் யோகேஸ்வரன் போன்ற தலைவர்களை சுட்டுக் கொன்ற பின்னரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் போக்கை எண்ணிக்கவலைப் படுகிறேன் இவர்கள் புலிகளுக்கு பயந்து அவர்களுக்கு ஏற்றவாறுபேசிவருகிறார்கள்

ஐ தே கட்சி முன்னாள் எமபி தி மகேஸ்வரன் தமிழ்க கூட்டமைப்புக்கு ஆதரவாகப் போட்டியிடுகிறார் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்புடன் இணைந்து ஐ.தே.கட்சியின் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செய்துள்ளனர் இவ்வொப்பந்தம் பத்திரிகையில் வெளிவந்துள்ளது.

விடுதலைபுலிகளுடன் பேசாமல் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது என்றும்கூறப்பட்டுள்ளது. இதனை நான் ஏற்றுக் கொள்கிறேன் ஆனால் விடுதலைப்புலிகளுடன் மட்டும் தான் பேச வேண்டுமென்றும் ஏனையவர்களுடன் பேசக்கூடாதுஎன்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்களின் கருத்தையறிந்து புலிகளுடன் மட்டுப்பேச வேண்டுமென்று கூறுவதுஎவ்வளவு தூரம் நியாயமானது.

தமிழ்க்கட்சிகள்கூட்டமைப்பின் பின்னால் புலிகள்நின்று செயற்படுகிறார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழ்க் கட்சிகளும், பிரபாகரனும் இணைந்து ஆட்சியை அமைக்க விரும்புகிறர்கள் என்பதை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் பேச்சுவார்த்தைக்கு வந்தாலும்தமிழ்ஈழத்தை அவர்களுக்கு அரசு ஒரு போதும் வழங்கமாட்டது:

வடக்குக் கிழக்கை 5வருடத்திற்கு பிரபாகரனிடம் ஒப்படைக்கப் போவதாக 99ல் ரணில் விக்கிரமசிங்கா கூறியிருந்தார் இது குறித்தும் பயங்கரவாதம் குறித்தும் சிங்கள மக்களுக்கு ரணில் என்ன கூறப் போகிறர் என்பதை தெரிவிக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி கேட்டுக் கொண்டார். (வ)

## அரசு

வாரம் நியுயோர்க் செல்லும் போது அங்கு நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜனாபீற்றன் சனைச்சந்தித்து அரசு- புலிகள் உடனான சமரச முயற்சிக்கு புத்துயிர் ஊட்டும வகையில் செயற்படுவேனென்று கதிர்காமர் கூறினார். (இ)

## நிபந்தனையின்றி

லுததபபடும் என்றும் இவ் விடயத்தில் சர்வதேசஆதரவினை எதிர்ப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

டிசம்பர்மாதம் 5ம்திகதி நடைபெறவுள்ள தேர்தலுக்குப் பின்னர் பொதுஜன ஐக்கியமுன்னணி அரசியல் ரீதியில் பெரும்பான்மைப் பலத்துடன் அரசாங்கத்தை அமைக்கும்.

பொது நிர்வாகத்துறையில் பெரும்பாலான அதிகாரம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிடமே உண்டு.

பொதுமக்கள் ஊழல்பேர் வழிகளைப் பாராளுமன்றத்திற்கு அனுப்பக் கூடாது. வாக்காளர்கள் அறிவுபூர்வமாகச் சிந்தித்துதமது வாக்குகளை அளிக்கவேண்டுமென்று அமைச்சர் டி,எம் ஜயரத்தின மேலும் தெரிவித்துள்ளார். (வ)

## புளொட்

தும், அவர் அந்த நகர சபைக்குச் சொந்தமான 'பிக் அப்' வாகனத்தை ஓட்டி வந்தார் என்பதும் எனக்குத் தெரிய வந்தது.

எமது வாகனத்தை ஏன் நிறுத்தினீர்கள், ஏதாவது பேசவேண்டுமானால் சொல்லுங்கள் என்று அன்ரன் பொன்னையாவிடம் கேட்டேன் அதற்கு அவர் எனது வாகனத்தின் சாரதியை தனக்கு தெரியுமென்பதால் மறித்தேன் என்று கூறி அண்ணே நீங்கள் சென்று வாருங்கோ, மன்னித்துக் கொள்ளுங்கோ என்று கூறி அனுப்பிவிட்டார்.

இதனால் நான் யாழ் காவல்துறையினரிடம் முறைபிடவோ பத்திரிகைக்கு சொல்லவோ விரும்பவில்லை

ஆனால் வலம்புரிக்கு புளொட் தெரிவித்த செய்தி போல் அப்பகுதிபொதுமக்கள் தலையிட்டு பேசினார்கள் என்று கூறுவதில் எந்த உண்மையும் இல்லை ஆனால் எனது உயிருக்கு ஆபத்து ஏற்படவிருந்ததாக எனது பாதுகாவலர்கள் என்னிடம் கூறினார்கள்

இதுதொடர்பாக பொலிஸ் மாஅதிபருடன் தொடர்பு கொண்டு முறையிடவுள்ளேன் என்றும் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார் (ந)

---

# சென்றலைற்ஸ் விளையாட்டுக் கழகம்

### யாழ்ப்பாணம்

## அறிவித்தல்

8-11-2001 உதயன் பத்திரிகையில் விளம்பரப்படுத்தி உள்ள யாழ் | சென்றலைற்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும். சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகத்திற்கும் எவ்விததொடர்பும் இல்லைஎன்பதனையும,

டொனால் கணேசகுமார் ஞாபகார்த்தகிரிக்கெட் சுற்றுப் போட்டியை நடாத்தும உரிமை சென்றலைற்ஸ் விளையாட்டுக்கழகத்திற்கே உள்ளது என்பதனையும், அவ்விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திரு. சொ. விமலதாசனும், திரு.G.பற்நணராஜா வும் 14-10 2001 அன்று நடைபெற்ற கழகத்தின் விஷேட பொதுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானப்படி கழக நிர்வாக சபை உறுப்பினர் உரிமையில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்கள் என்பதனையும்,

இச் சுற்றுப்போட்டி சம்பந்தமாக நிதி வசூலிக்கும் அனுமதியை எவருக்கும் சென்றலைற்ஸ் விளையாட்டுக் கழகம் வழங்கவில்லை என்பதனையும் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

| | |
|---|---|
| கி.ச.சாந்தீகரன் | ச.பிறேம்குமார் |
| தலைவர் | கௌரவ பொதுச் செயலாளர் |
| சென்றலைற்ஸ் | சென்றலைற்ஸ் |
| விளையாட்டுக்கழகம் | விளையாட்டுக்கழகம் |

---

# மக்கள் குறைநிவிர்த்தி சேவை மத்திய மற்றும் மாகாண அமைச்சுக்களின் நடமாடும் சேவை

## துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் 10ம் 11ம் திகதிகளில் நடைபெறவுள்ள மக்கள குறைநிவிர்த்தி சேவையில் கலந்துகொள்ள வருபவர்களின் துவிச்சக்கரவண்டிகள் பாதுகாப்பாக நிறுத்தி வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இதற்காக பிரதான வீதியில் பழைய மாநகர சபை வளவிற்கு முன்பாகவுள்ள பகுதியிலும் மத்திய கல்லூரிக்கு மேற்காக பொது நூலகத்திற்கும், மத்திய கல்லூரிக்கும் இடையிலுள் ளவீதியிலும் பாதுகாப்பாக துவிச்சக்கர வண்டிகள் நிறுத்திவைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இதற்காக பிரதான வீதியில் பழைய மாநகர சபை வளவிற்கு முன்பாகவுள்ள பகுதியிலும் மத்திய கல்லூரிக்கு மேற்காக பொது நூலகத்திற்கும், மத்திய கல்லூரிக்கும் இடையிலுள்ள வீதியிலும் பாதுகாப்பாக துச்சக்கர வண்டிகளை நிறுத்திவைக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

செயலாளர்

வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சு

(2844)

---

# வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு

## மக்கள் குறைநிவிர்த்தி சேவை, மத்திய மற்றும் மாகாண அமைச்சுக்களின் நடமாடும் சேவை

## பஸ் போக்குவரத்து

யாழ்ப்பாணம் நகரத்தை நோக்கி வரும் பேருந்து சபையின் வண்டிகள் அனைத்தும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள மக்கள் குறைநிவிர்த்தி சேவையை முன்னிட்டு யாழ்ப்பாணம் வேம்படி மகளிர்கல்லூரி சந்தி ஊடாக மத்திய கல்லூரி மைதானம் வரை சேவையை நடத்தவுள்ளன

எனவே மக்கள் குறைநிவிர்த்தி சேவையில் கலந்து கொள்வதற்காக வரும் பயணிகள் நேரடியாக மத்திய கல்லூரிமைதானம் வரை பயணம் செய்ய முடியும்

செயலாளர்,

வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சு.

(கி 2843)

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு நவம்பர் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.